ஸ்ரீ

கடவுள் துணை.

பொருநராற்றுப்படைப்பொருள்விளக்கம்.

இது

சென்னைக் கிறித்தவ கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
கா. ஸ்ரீ.
கோபாலாசாரியரவர்களாலும்

ஷை கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
வா. மகாதேவமுதலியாரவர்களாலும்
எழுதப்பட்டு,

சென்னை
கார்டியன் அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

பிலவங்க௵ - ஐப்பசிமீ.

1907.

PREFACE.

Several years have passed since we became aware of the advantages of studying the standard Tamil works on English lines, especially in regard to the evidences they furnish in matters, social and moral, literary and scientific, religious and philosophical.

The experience we have had as college pandits in respect of the taste of the students of the day and the tendency and the mode of questions of the Board of Examiners of the Madras University have made known to us that such a study is but opportune and season- able. Consequently, we have prepared this work, fully confi- dent that it would supply the wants of the candidates ap- pearing for the Degree Examinations. At first, we intended to write a detailed analysis and commentary ; but, as it would be to overlook the present requirements of the college stu-

dents for whom it is intended, we have not done so.

This work has been passed through the press hurriedly at the instance of the students of our college and with their pecuniary help; and, as a matter of course, many typographical errors may have crept in here and there, but we sincerely hope our enlightened friends will not mind defects.

K. S. G.

MADRAS, W. M.
28th October, 1907.

ஸ்ரீ

பொருளடக்கம்.

—(*)—

... ... 48

கடவுள் துணை.

பொருநராற்றுப்படைப் பொருள்விளக்கம்.

நூன்முகம்.

மக்களுயிர்க்கு உறுதியென ஆன்றோரான் எடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவைதம்முள் அறம் பொருள் இன்பம் மூன்றும் இம்மைக்கண் அடைதற் குரியன. வடநூலார் திரி வர்க்க மென்னும் இம்மூன்றனையுந் தமிழ்நூலார் அகம் புறமென இரண்டாகத் தொகுத்துக் கொள்ப. காமப்பகுதியை அகமென
வும், ஏனைத் தர்மார்த்தங்களைப் புறமெனவுங் கொண்டு, அவை யிற்றை இலக்கண இலக்கிய நூல்களாற் கூறுப. அகம் புறங் களைப் பாகுபடுத்து ஆசிரியர் தொல்காப்பியனார்

விரித்து இனிது
விளக்கினர். அவ் வகம் புறங்களின் வழியாக அகநானூறு புறநானூறு முதலிய அரிய பெரிய இலக்கியங்களைப் பண்டைக் காலத்து நல்லிசைப்புலவர் இயற்றினர்.

அகம்:

அகமாவது:—அகத்தின்கண்ணே நிகழ்வது. அஃதாவது இன்பம். அகத்தின் நிகழ்வதொன்றனை அகமென்றது இடவாகு பெயராம். அகத்தே நிகழும் இன்பம் அகமெனப்படு மெனவே, அகத்தே தோன்றும் துன்பமும் அகமெனப் படுமாலெனின், அத் துன்பமுங் காமம் பற்றியதாயின், அஃதாவது பரத்தையிற் பிரிவு முதலிய வற்றான் உளதாயின் அதுவும் அகத்துட்படு மென்ப. மற்று, காமநிலையின்மையின் வருந்துன்பமும் தாபத நிலை தபுதார நிலையென வேறாம். இதுவும்

பிறகாரணங்களான் உளதாகுந் துன் பமும் புறத்தார்க்குப் புலப்படாவண்ணம் மறைக்கலாகாமையின்
புறத்தின்கண்ணவாம். இது மாநதத்துவசாத்திரத்தின் (Psychology) ஒரு பகுதி குறிப்பதுணர்க. ஈண்டுக் கூறப்பட்ட இன்பம் குலம், நலம், உருவம், பருவம், அருள், தெருள், திரு முதலிய

2

ஒற்றுன் ஒப்புமையுடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முட் கூடுகின்ற காலத்துப் பிறந்து, அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவராலும் ஒருவருக் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், எஞ்ஞான்றும் உள்ளத்துணர்வானே நுகரப்
படுவதென்ப. மெய்யுறுபுணர்ச்சி யொன்றுனேயுளதாகும் இன்பம் உயிர்கட் கெல்லாம் பொதுவாயினும், அவ்வின்பம் மேற் காட்

டிய குல நல முதலிய குணங்கள் இல்வழி, சின்னாளிருந்து பின்னு வழிவுறாமடீஇபாய்யின்பமாய் முடிதலின், நூல்களில் அறிஞரால் இன்ப மென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது அப்போலியின்ப மன்றும். மற்றியாதோவெனின், தனியிடத்துத் தெய்விகமாய்த் தலைப்பட்ட தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாரு மின்றித் தங் கண்ணுங் கருத்து மிசைந்து நிற்பக் குல நலமாதி குணங்களான் வேறுபாடு மாறாவின்பமே யென்பதறிக. ஸ்காட் டென்னு மோர்புலக்கவிவாணரும்,

" True love's the gift which God has given
To man alone beneath the heaven.
It is not Fantasy's hot fire,
Whose wishes soon as granted fly;
It liveth not in fierce desire,
With dead desire it doth not die.
It is the secret sympathy,

The silver link, the silken tie,
Which heart to heart and mind to mind,
In body and in soul can bind."

என்றார்.

"O happy love! where love like this is found!
O heart-felt raptures!—bliss beyond compare!
I've paced much this weary, mortal round,
And sage experience bids me this declare—

'If heaven a draught of heavenly pleasure spare,
One cordial in this melancholy vale,

'Tis when a youthful, loving modest pair,
In other's arms breathe out the tender tale
Beneath the milk-white thorn that scents the ev'ning gale"

என ராபர்ட் பர்ன்ஸ் (Robert Burns) என்னும் மற்றொரு கவிஞரும் கூறியது காண்க.

புறம்:

இனி, அகப்பொருள்போலக் குலன் நலன் முதலியவற்றால் ஒத்த அன்பினையுடையாராகிய தலைவனுந் தலைவியுமே யன்றி எல்லாரானும் நுகர்ந்துணரப் படுதலானும், இஃது இவ்வாறிருந்தது எனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் இது புறமெனப்பட்டது. புறப்பொருள் என்பது அறமும் பொருளுமாம். அறமாவது-மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலு மாம். பொருளாவது-அரசனீதி துணைக்கா ரணமாக

ஈட்டப்படு வனவாய மணி பொன் நெல் முதலியனவாம் என்பவாயினும், பொருள் எனப் பொதுப்படக்கூறவே, இவற்றின் பகுதியாகிய முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் காட்சிப்பொரு ளும் கருத்துப்பொருளும் , இவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூத மும், இவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும் பிற வும் பொருளாம் என்க.

இன்பம் பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை அக மெனக் கொண்டு, இவ்வகத்தொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்க மாகலின், கற்பொடு பொருந்திக் கணவன்சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கையாதலின், அவ் வில்லிருந்தொழுகும் ஒழுக்கத்தை முல்லை யெனவும், புணர்தலின்றி இல்லறம் நிகழாமையின், அப்புணர்த லொழுக்கத்தைக் குறிஞ்சி

யெனவும், புணர்ச்சிப்பின்
அப்புணர்ச்சியின்பத்தைச் சிறப்பிப்ப தாகிய ஊடல் நிகழ்தலின், அவ்வாறு ஊடியுங் கூடியும் போகம்
அகரும் ஒழுக்கத்தை மருத மெனவும், தலைவன் வினைவயிற் பிரியும் பிரிவொழுக்கத்தைப் பாலை யெனவும், பிரிந்தழி, அப்பிரிவு

4

நீட்டித்தலாற் காமங் கைமிக்குத் தலைவி இரங்க லியல்பாகலின்,
அவ்விரங்குதலாகிய ஒழுக்கத்தை நெய்த லெனவும் ஐந்து திணையாகப் பாகுபடுத்தும், காமக்குறிப்பிற்கு அமைதியில்லாத இளமைப் பருவத்தளாய ஒருத்தியினிடத்து உண்டாகுங் குறிப்பினைத் தானறியுமளவும் நெருங்காது நின்று, மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தி ஒருதலைவன் நன்மையுந் தீமையுமாகிய கூறுபாட்டினையுடைய சொற்களைத் தன்னேடும் அவளோடுங் கூட்டிச் சொல்லி, அதற்கு எதிர்மொழி பெறாது,

பின்னுந்தான் சொல்லி இன் புறுதலாகிய ஒருதலைக்காமத்தைக் கைக்கிளையெனவும், தலைவன் மடன்மா வூர்வேனென்று கூறுதலன்றி மடன்மாவேறுதலும், தலைவி தலைவற்கு இளையளாகாது ஒத்த பருவத்தளாதலும், அறி வழி குணனுடையளாதலும், காமமிகுதியானே எதிர்ப்பட்டு வலி நிற் புணர்ந்த இன்பத்தோடு கூட்டப்பட்டுக் கந்தருவத்தின் வழு வியதுமாகிய பொருந்தாக்காமத்தைப் பெருந்திணை யெனவும் வே றிரண்டு பாகுபாடு செய்து, அகப்பொருட்டிறங்களை யெல்லாம் ஆசிரியர் தொல்காப்பியனார் விரித்துரைத்து, அவ்வகத்தின் வேறு பட்ட புறப்பொருட்டிறங்களைக் கூறுவான் புகுந்து, இனி வருமாறு வகுத்து விரிக்கின்றார்:

புறப்பொருளில், ஆசிரியர் அறனும் பொருளும் வீடுங்கூறு வாராய்ப் பெரும்பான்மை நால்வகை வருணத்தார்க்கும் உரிய

இல்லறங் கூறிப் பின் சிறப்பான்மை துறவறமுங் கூறினர். இப் புறப்பொருட் பகுதியை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுதிணையாகப் பாகுபடுத்தனர். இவற்றுள் இருபெரு வேந்தர் பொருவது கருதியக்கால், மன்னுயிர் காக்கும் அன்புடைவேந்தர்க்கு மறத்துறையும் அறமே நிகழுமாதலின், மற்றொருவர்நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்கு செய்தலாகாத சாதிகளாகலான், அவற்றை அந்நாட்டினின்றும் அகற்றல் வேண்டி, போதருகவெனின், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக்கவர்ந்து கொண்டுவந்து பாதுகாத்தல் முதலிய ஒழுக்கத்தை வெட்சித்திணையானும், வெட்சித்திணையிற் கூறியவாறு நிரைகவரப்பட்டுத் தோல்வியுற்ற வேந்தன் நிரை

கவர்ந்தானை அடல் குறித்து

மண்ணசையால் அவன்மேற் செல் லுதலாகிய ஒழுக்கத்தை வஞ்சித்திணையானும், அங்ஙனம் சென்ற வேந்தன் மற்றை வேந்தனது அரணை முற்றுதலும் (வளைத்து கோட லும்) ஆண்டிருந்த வேந்தன் அதனைக் காத்தலுமாகிய ஒழுக்கத்தை

உழிஞைத்திணையானும், தனது வலியை உலகம் மீக்கூறுதலே தான் பெறுதற்குரிய பொருளாகக் கருதிமேற்சென்ற வேந்தனை மேற்செல்லப்பட்டானாகிய வேற்றுவேந்தனும் அவன் கருதிய வலியே தான் பெறுபொருளாக எதிர்சென்று அவனது தலைமையைத் தீர்க்கும் ஒழுக்கத்தைத் தும்பைத்திணையானும், ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அந்தணரியல்பும், ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டஞ்செய்தல் என்னும் அரசரியல்பும், ஓதல் வேட்டல் ஈதல் உழவு நிரையோம்பல் வாணிகம் என்னும் வணிகரியல்பும், காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுக லாற்றினை அமைத்த முழுதுணர்வுடையோரியல்பும், வீடுபெற முயல்வார்க்கு உரியவாய எண்வகை மார்க்கத்துத் தவத்தினரியல் பும், தாந்தாம் அறியும் இலக்கணங்களாகிய சொல்லானும் பாட்டானும் கூத்தானும் மல்லானும் சூதானும்

பிறவாற்றானும் வெல்லுதல் கருதிப்
போர்செய்வாரதியல்புமாகிய
இவையிற்றையுடையார் தாமே மிகுதிப்படுத்தலும்
பிறர் மீக்கூறுபடுத்தலுமாகிய ஒழுக் கத்தை
வாகைத்திணையானும், அறம் பொரு ளின்ப
மென்னும் பொருளும், அவற்றுப்பகுதியாகிய
யாக்கையும் இளமையும் செல்வ மும் எனப்படும்
இவை முதலிய பல்வேறு நிலையாமையைச் சான்
றோர் சாற்றுங் குறிப்பினதாகிய உலகின
தொழுக்கத்தைக் காஞ்
சித்திணையானும், பாடல் பெறற்குரிய ஆண்மகனது பெருமை
பொருந்திய வலி அளி கொடை புகழ் முதலியவற்றை ஆராய்ந்து
பாடுதலாகிய ஒழுக்கத்தைப்
பாடாண்டிணையானும் ஏழாகப் பாகு
படுத்துப் புறப்பொருட் பகுதிகளை யெல்லாம்
பன்முகமாக விரித்
துக் கூறினர். இவ்வாறு, அகம் புறமென இரு பெருபிரிவினையுடைய
பொருளிலக்கணங் கூறு மாற்றான் இம்மைக்கண்
அடைதற்பால

வாய அறம்பொருளின்பமும் அவற்றது நிலையாமையுங் கூறி, இறுதிக்கண், நிலையுவதாகிய வீடுபேற்றின் சிறப்பும் அது பெறு தற்காம் உபாயமுங் கூறினாராகவே; ஆசிரியர் தொல்காப்பியனார்

பெரிதும் பயன்தருவதோ ரிலக்கணமே கூறினாராயிற்று; இதனாற் செய்த செய்யுள்வழக்கு உலகியல் வழக்கினை யுணர்ந்தோர் இம்மை மறுமை வழுவாமற் செம்மை நெறியால் துறைபோவரா தலின்.

" வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புக
ழானாப் பெருமை யகத்திய னென்னு
மருந்தவ முனிவன் "

என்று புட்பதந்த பண்டிதராலத்துப்

புகழ்ப்பெற்ற ஆசிரியர் அகத்தியனார் இயற்றியருளிய முதனூல் பிறநூல்களிற் பல கடைச்சங்கத்தார் காலத்திற்கு முன்னரே இறந்தொழிந்தனவாக, அம்முதனூலாசிரியராகிய அகத்தியனாரிடத்தே தமிழ் நன்குணர்ந்த திரணதூமாக்கினி, அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் மாணாக்கர் பன்னிருவருள்ளும்,

" பொருந்தக் கற்றுப் புரைதப
வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப்பியன் "

எனப் பெருஞ் சிறப்பெய்தித் தலைமைசான்ற ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய " ஒல்காப் புகழுடைத் தொல்காப்பிய " மென்னும் அரிய பெரிய நூலே தலைச்சங்கத்தின் பின்னிருந்து தமிழாராய்ந்து பனுவலியற்றிய பாவலராகிய பண்டைப்புலவர்க் கெல்லாம் சிறந்த இலக்கணமாய் நின்று நிலவி விளங்குவதாயிற்று. ஆகவே, அன்ன நல்லிசைப்

பாவாண ரெல்லாரும் அதனை ஆதாரமாகக் கொண்டு பன்னூல்களும் யாத்தனர் என்ப. அந்நூல்களுள், தொகைநூல்களும் அத் தொல்காப்பியத்தின் வழிப்படுவனவாம் என்பது கற்றுவல்ல மேலோர்துணிபு. தொகைநூல்களாவன: (1) பத்துப்

பாட்டும், (2) எட்டுத் தொகையும், (3) பதினெண் கீழ்க்கணக்கும் என இவை.

ஈண்டுக் கூறிய பத்துப்பாட்டென்னும் நூற்றொகுதியுள் ஒன்றாகிய பொருநராற்றுப்படைக்குப் பூர்வாங்கமாக இதுகாறும் சில எழுதிப்போந்தாம். பொருநராற்றுப்படையின் செய்யுட்டிறத்தையும், அப்பாட்டினுட் காணப்படும் ஏனைய சிறப்பியல்புகளையும் ஆராய்ந்து அதனுரையை வகுத்து விளக்குதன்முன், பாட்டு எனப்படுவது இஃவியல்பினதாம் என்பதை ஒரு சிறிது ஆராய்வாம்:

இறைவனது விசித்திர சக்தியை விளக்கும்

உலக வியற்கை யில் காட்சிப்பொருளுங் கருத்துப்பொருளு முதலிய பல்வேறு பொருள்களின் அழகினை யெல்லாம் நன்குணர்ந்து நுகர்வல்ல சுவை யுணர்ச்சியும் நாகரிக வொழுக்கமு மிக்க ஆன்றோர் தாங் கண்டறிந் தின்புற்ற பொருள்கள் பிறருளத்தே யொன்றி நின்று உணர்ச்சியை யெழுப்ப, அவ்வுணர்ச்சி யெல்லாம் மெய்யினிடத்தே உண்மையாக வெளிப்படும் வண்ணம் வியப்புறத் தெளிவாக ஓசை நலங்கொண்டு

---

(1) பத்துப் பாட்டு:—முருகு பொருநாறு
பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி-
மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி
பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

(2) எட்டுத்தொகை:—நற்றிணை நல்லகுறு
ந்தொகையைங்குறுநூ

ஒருத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே

யகம்புறமென்

றித்திறத்த வெட்டுத் தொகை.

(3) பதினெண் கீழ்க்கணக்கு:—நாலடி
நான்மணி நானாற்பதை

(ந் திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி

யென்பவே கைந்நிலைய
தாங்கீழ்க் கணக்கு.

8

செவ்விய சொன்னடை பெற்று நிகழ்வது பாட்
டென்று ஒருவாறு உணரப்பெறும். இன்மை

இளமை முதலிய உடற்குணங்களும், அன்பு அடக்க முதலிய உயிர்க்குணங்களும் ஒருவனை அழகு செய் வனபோல, செறிவு தெளிவு முதலிய குணங்கள் ஒற்றுமை நயத் தினாலும், ஆரகேயூர கடககுண்டல முதலிய அணிகள் பொலிவுறுத் தல்போலத் தன்மை உவமை முதலிய அணிகள் வேற்றுமை நயத்தி னாலும் அழகு செய்யப்பெற்று, ஒன்பான்சுவையும் ஓசையின்பமும் பொருளாழமுங் கொண்டு விளங்குஞ் சொற்றொடையே பாட் டென்றுணரற்பாலதென்றார் அணிநூலுடையார்.

> "எழுத்து முதலாய வீண்டிய வடியிற்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பென மொழிப யாப்பறி புலவர்"

எனச் செய்யுளியலின்கண் யாப் புணர்த்தினர் ஆசிரியர் தொல்காப்பியர். இச்சூத்திரவுரையில், 'பொருளன்றி வேறு வேறு செய்யாது பொருட்டொடர்பட எழுத்தும் அசையுஞ் சீருங்கொண்டு இன்பம்பெற இயன்ற

அடியிற் புலவன் தான் கருதிய பொருளை அமைத்தது யாப்பு' எனவும்,

" முயற்கோடு சீலி முதலிசும்பு போழ்ந்தான் "

என்றவழி, எழுத்தும் அசையும் சீரும் பொருளிலவாகி வந்தமையின், சொல்லிலக்கணத்தாற் சொற்றொறும் பொருளுடைய வாயினும், அஃது யாப்பெனப்படாது' எனவும் உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் உரைத்தனர்.

தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு முதலிய பல்வகைத்தா துக்களான் உயிருக்கிடனாகச் செய்யப்பட்ட உடலேபோலப் பல்வகைச் சொற்களான் அறிவின்வல்ல புலவரான் அணி பெறச் செய்யப்படுவன செய்யுள் என்றார் நன்னூலார். எனவே, பிரமனது படைப்புப் போன்றது புலவரது செய்யுளமைப்பும் என்

நநாயிற்று. [எனினும், அப்பிரமன் செய்யும் பூதவுடல்போலப் புலவர் தமது கவிதையாற் செய்யும் புகழுடல் மாயாது என்றும் நின்று நிலவும் என்பது போந்தது:

9

" கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு மலரவன்
வண்டமிழோர்க் கொவ்வான்-மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா
புகழ்கொண்டு மற்றிவர் செய்யு முடம்பு"

என்னும் குமரகுருபரர் செய்யுள்
இதனைவிளக்குவதாம்.]

கல்வியிற் பெரியரும் கவிசக்கரவர்த்தியுமாகிய தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வாரும் தமது தமிழ்ப் பெருங்காப்பியமாகிய இராமாயணத்தின்கண், கவிதையின் அமைதி இத்திறத்தது என்பதை ஒரு செய்யுளிற் சுருக்கி விளக்கினர்.

அது வருமாறு:—

"புலியினுக் கணியா யான்ற
பொருடந்து புலத்திற்றாகி
அவியகத் துறைக டாங்கி யைந்திணை
நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச்
(சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை
வீரர் கண்டார்."

இச்செய்யுளிற் சான்றோர் கவியைச் சிலேடைவகையான் உவமங் கூறிக் கோதாவரியை வருணிக்கப் புக்கவிடத்து, சான்றோர் கவி புவியின்கணுள்ளார்க்கு அலங்காரமாகி, அறம் பொருளின்ப மென்னும் விழுமிய நால்வகை உறுதிப்பொருளையும் பயப்பதாகி, அறிவினைத் தன்பாற்கொண்டதாகி, அமாருணவினையொத்த அகப்பொருட்டுறைகளைக் கொண்டு, ஐவகை

நிலத்தின் ஒழுக்கத் தைக் கலந்து, தன்னைப் படித்தல் கேட்டல் செய்வார் ஒளிபெறத் தெளிவுடையதாகி, தண்ணளிபூண்டு அவ்வவ்வருண நிலைக்கேற்ற ஒழுக்கத்தைக் கொண்டியல்வது எனப் பாட்டின் திறத்தை ஒருவாறு காட்டிப்போந்தார்.

இவ்வாறு, தொல்லை நல்லிசைப்
புலவரெல்லாரும் பனுவலி

ழைத்தவிடத்தெல்லாம் தன்னின்று வெண்மணலூற்றினைத் தோண்டிய வழித் தெண்ணீர் குமிழியிட்டுப் பாய்தல்போலப் புலவர் தம் புலன்களுக்கு விளங்கித் தோன்றிய பொருள்களை வெளியிடும்வழி அவரது அறிவினின்று பாட்டுத் தட்டுத் தடையின்றி வெளிப்பட்டது.இவ்வியல்பு தமிழிலேயன்றி ஏனைய மொழிகளிற் கவிசெய்தார்

10

க்கும் ஒப்பமுடிந்ததாம். கவிசெய்தற்கண் இயற்கையாற்றல் படைத்த போப் (Pope) என்னும் மேற்றிசைப் புலவரொருவர் தமது சிற்றஞ் சிறுபருவத்தே செய்யுளியற்றிவருதலை

புணர்ந்த அவரது தந்தையார் 'கவிதை யியற்றுவதிற் காலங்கழியேல்' என அவரைப் புடைத்தபொழுது, புடையுண்டழும் இளங்கவி போப் தமது அழுகையின்கண் தந்தைக்குக்கூறிய விடை ஒரு செய்யுளாய் வெளிப் பட்டதென்பர். அது வருமாறு:—

"Pappa, Pappa, mercy take,
I shall no more verses make."

அன்பிற்பிரியா ஆணும் பெண்ணுமாகிய அன்றிலிரண்டு ஒன்றியிருந்து கூடிக்குலாவி இன்புறும்பொழுது கொலைத்தொழிலே தனது குலத்தொழிலாகக் கொண்ட கொடிய வேடனொருவன் கூரியகணைகொண்டு அவ்வன்றிலினையி லொன்றினை யெய்து வீழ்த்தலும், அது கண்ட கடவுண் முனிவர் கலுழ்ந் துளைந்த வார்த்தை ஒரு சுலோக ரூபமாய்ப் பொங்கி வெளிப்போந்ததென்ப.

" மாசிகநாத ப்ரதிவ்ஸ ாத்ம மகமர்சாதி
வதீஸ்ஸமா:
யத்க்ரௌஞ்ச மிது நாதேகமவதீ:
காமமோஹிதம் " என்பது.

இன்னும் மேற்புலப் புலவர் செய்யுளி னியல்பைப் பற்றிக் கூறியதை கண்டுக் குறித்துரைப்பாம்:

கடலையும் மலையையும் கானத்தையும் உன்னக்கிட்டிக் காண் போ ரறிவிற்கு மெய்போலக் கவின்பெறக் காட்டும் கைவல்ல ஓவியனைக் கவிஞனுக்கு ஒப்பிடுகின்றார் ஓராங்கிலப்புலவர். இளமை முதலிய நலனமைந்த மடவரலொருத்தியைப் பட்டுடை புனைந்து நற்கலனணிந்து பார்ப்பவர்க்கு வியப்பும் விருப்பமுந் தோன்ற அலங்கரித்துக் காட்டல்போல, உலக வியற்கையிற் காணப்படும்

பொருள்களைக் கவிகள் உயிருடையனவென உண்மை கலக்தோன்றி உவகை முதலிய உணர்ச்சியுண்டாகப் பாடுவர். அன்னார்க்கு உலகப் பரப்பின்கட் புலப்படும் பல்வகைப்பொருள்

களுமே புத்தகங்களாம். இறைவனது எல்லைகடந்த வன்மையி னுன் அமைக்கப்பட்டு அற்புதத் தோற்றமுடைய இவ்வகன் பெரு ஞாலமே அவர்க்குப் பெரியதொரு புத்தகசாலையாம். இத்தகைய மெய்ப்புலவர் நுட்பவறிவு செல்லாதவிட மில்லையாம். சூரியன் கதிர்புகா நுண் புலத்தும் இச்சீரியர் மதி புகும் என்ப. "రవియెరుగని తావు కవియెరుగును" "ரவியெருகனிதாவுகவியெருகுநு" என்னும் தெலுங்கர் வழக்குரையும் இதனை விளக்குவதாயிற்று. ஆராய்ச்சித் திறன் வல்ல இப்பெருந்தகையாரது நுண்ணறிவே அவர்க்கு அநுமானதரிசினியும் தூரதரிசினியுமாம் *.

அவர் தாம் புகலும் பொருட்கேற்ற ஓசை நயமும் சொல்லமைதியுந் தோன்றப்பாடுவர். அவரது கற்பனு சக்தி அளவுகடந்தது. அவர் தாம் கருதிய பொருளை வெளிப்படுத் துங்காற் சொல்லையும் சொற்றொடரையும் அணியையும் எதுகை மோனை முதலிய ஏனைய அழகுகளையும் தேடி வருந்தார். அவர்க்கு அவை தாமே வந்து இடனறிந்து நின்று ஏவல் செய்யும் என்ப. இது பற்றியன்றே,

"கவிதா வநிதாசைவ ஸ்வயமேவா கதா வரா
பலாதாக்ர்ஷ்யமாணைசேத் ஸாஸாவிரஸாபவேத்
"

என வடநூலாருங் கூறினர்.

கவிதை வநிதை கலப்பிற்று மேயின்
பலவை வலிதி னணையிற் - சுவையுறவே
இன்பஞ் செயுநல் வியல்பின்றி யேயெவர்க்குந்
துன்பமுள தாமென்றே சொல்.

நயனில் சொல்சில பறிக்குபு புன்கவி நவில்வார்
வயமு றுஞ்சொல்சேர் கவிஞரை யிகல்வோன்
மண்செ குயவ னும்மய னொடுகலாம் விளைத்தலுங்
கூடும் (ய் பயமி லாதவிப் பாமர ரொழுக்கை
யென் பகர்வாம்.

என்பன காண்க.

* அணுதரிசினி—Microscope. தூரதரிசினி—Telescope.

12

இனிப்பொருநராற்றுப் படையை யுட்கொண்ட பத்துப் பாட் டினியல்பைச் சிறிது கூறிப் பின்னர்ப் பொருநராற்றுப் படையுட் புகுவாம்.

(1) " நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
யேறிய வடியி னீரைம் பாட்டுத்

தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே"

(2) "அதுவே, அகவலின் வருமென வறைகுநர் புலவர்"

என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களாற் பத்துப் பாட்டினிலக்கணம் ஒருவாறு அறியப்படும். இச்சூத்திரங்களினாற் பத்துப் பாட்டின் ஒவ்வொரு செய்யுளினது யாப்புவகையும் அடிகளின் சிறுமை பெருமையுமே வெளிப்படையாகத் தெரிக்கப்பட்டனவாம். ஆயினும், தமிழினுக்குச் சிறப்பாயுள்ள ஒழுக்கமுதலியனவும், கடல் நகர் நாடு காடு மலை சிறுபொழுது பெரும்பொழுது முதலியவற்றின் உண்மைநிலையும், பண்டைக்காலத்துத் தமிழ் நாட்டரசருட் சிற்சிலரது சரித்திரக்குறிப்பும், அவர் போர்செய்த முறையும், அவரது

அரசுமுறையும், அக்காலத்துக் கல்வி செல்வம் கைத்தொழில் வர்த்தகம் பயிர்செயல் முதலிய வற்றின் நிலைமையும், பிறவும்

அறிந்துகோடற்கு இந்நூல் ஒரு சிறந்த கருவியாகுமென்பது இப் பத்துப்பாட்டையொத்த பழைய தமிழ் நூல்களிற் பயிற்சி மிக்க பண்டிதர்க்குப் புலனாம் என்பது துணியப்படும். இந்நூலினது

அருமையும் பெருமையுங்கருதியன்றே பிற்காலத்து நூலாசிரியரும் உரையாசிரியரும் முறையே தம் நூலி

னுள்ளும் உரையினுள்ளும் இதன் பொருளையே யன்றிச் சொல்லையும் அழகுஞ் சுவையும்பெருக ஆங்காங்குப் போற்றிக்கொள்வாரா யினர். இதனை,

" ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு"

என இந்நூலின் உரைச்சிறப்புப் பாயிரத்தின் அடிகள் பொருந்தாநிற்கும்.

புலப்

13

இதுகாறும் கூறிப்போந்தவை யாமெடுத்துக்கொண்ட பொருநராற்றுப் படையின் கடை முதலியவற்றை அறிதற்கு வேண்டப் படுவனவாய சில குறிப்புக்களாம். இவையிற்றை இன்னும் விளக்கிச்செல்லின் விரிவு பெரிதுடைத்தாய் யாம் வெளியிடக் கருதிய இந்நூல் பின்னும் பெருகுமாதலானும், அங்ஙனம் விரித்தெழுதி னும் அது பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்க்கு அத்துணையாக வேண்டுவ தொன்றன்றாதலானும், இதுவும் அன்னார் பன்னாள் கழித்துச் சின்னாண் முன்னரே எழுதி வெளியிடும் வண்ணம் எம்மை வேண்டித் தூண்டினமையானும், எமக்குக் கலாசாலைத் தொழிலொடு ஏனைய தொழில்களி னிடையிடையே கிடைக்குங்காலம் மிகச் சிறியதாதலானும்

இவ்வளவே அமையுமென விடுத்தாம். இனி, பொருநராற்றுப்படையுட் கிடைக்கும் பொருள்களை ஆராய்வோமாக.

I. பொருநராற்றுப்படை.

இத்தொடர்மொழியின் பொருளாவது பொருநரை வழிப்படுத்தல் என்பது; [ஆற்று-வழி.] இளஞ் சேட்சென்னி யென்பவன் புதல்[illegible]கிய சோ[illegible] [illegible]ரிகா[illegible]பெருவளத்தானைப்பாடி அவன்பால் [illegible] யானை முதலிய

பெருஞ்செல்வத்தைப் பரிசிலாகப் பெற்று நிறைந்த வுள்ளத்தரேய் மீண்டுவருவா னொரு பொருநன் வறுமைத் துயரான் வாட்டங்கொண்டு காட்டினகத்தே வருவான் மற்றொரு பொருநனைத்தலைப்பட்டு அவனைநோக்கி, 'நீ கரிகாற் பெருவளத் தானிடமெய்துவையேல் மிக்க செல்வம்பெற்று மிடித்துயரொ ழிந்து மகிழ்வை' என்று அவனை வழிப்படுத்ததாகப்பொருளமைதி செய்து பாடப்பெற்ற நூல் என்பது பொருளாம்.

பொருநர் என்பார் ஒருவகைச் சாதியார். பாடி வாணாட் செலுத்துதல் இவரது தொழிலாம். இவர் ஏர்க்களம்பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணிபாடுநர் எனப் பல்வகையினராம். இவர்தம்முள் ஈண்டு இப்பாட்டினுக்குரிய பொருநன் போர்க்களம்பாடுவோன் என்க. இது,

"பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந"

(56-57.)

என்னுமிடத்து, ‘ [illegible]டற்றுப்
பாடலைத்தொடங்கி எழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தே யுடைத்தாகிய யாழையுடைய கூத்தர்க் குத் தலைவனே’ எனவும், இவன் போர்க்களம்பாடும் பொருநனுதலா னும், கூத்தரில் இவனிற் சிறந்த கூத்தர் இன்மையானும் இங்ஙனங் கூறினர்’ எனவும் மெய்ச்சும்புலமை நச்சினார்க்கினியர் செய்துள்ள உரையால் தெளியப்படும். இப் பொருநர் மனைவிமக்கள் முதலிய சுற்றத்தோடு பலவிடங்களிற் சென்று பாடிப் பரிசில்பெறுவாரென் பது துணியப்படும். இதற்கு ஆதாரம் இப்பாட்டினுள்ளும் ஒருவாறு அறியக்கிடக்கின்றது;
61-99-100-101-107-121-122 அடிகளை யும் அவற்றின் உரையையுங் காண்க.

‘பொதுவகையான் “ஆற்றுப்படை மருங்கின்” என்றாராயினும், ‘சுற்றத்தோடு சுற்றத்தலைவனை ஆற்றுப்படுத்தற்கண்ணது இம்மயக்கமென்பது பாதுகாத்து

ணர்க வென்பார் "போற்றல் வேண்டும்" என்றார்' என்னும் சேனா வரையருரை ஈண்டுணரற்பாலது.

இக்காலத்து, கையில் உடுக்கைபோலும் ஒரு சிறிய தோற்கருவியைக்கொண்டு வைகறையில் வீடுதோறும் வாயிற்கண் நின்று குடுகுடுப்பை யென்னும் அக்கருவியை அசைத்தடித்து ஒலிசெய்து எதிர்வது கூறிப் பழைய உடைமுதலிய இரந்து வருவோர் இப் பொருநர் வகையைச் சார்ந்தவ ராகலாமென ஊகித்தற்கு இடனுளது. அக்காலத்தில், கல்விச்சிறப்பும் கவித்திறமையும் பெற்றுக் [illegible] லரிடம் கனமடைந்துவந்த இவ்வகுப்பினர், கனங்குறைந்து கீழ்நிலையடைந்த மற்றுஞ்சில பொருள்கள்போல,நாளடைவில் கல்வி முதலிய வளன்குறைந்து வாழ்க்கைநிலையி னிழிந்து இங்ஙனம் இரந்துண்போராயினர் போலும்.

அன்றியும், இப் பொருளை ர யொக்கும் ஒருவகையார் கன்னடதேயத்திலின்றும் இக்காலத்திற் போந்து ஒருகூட்டத்தாராய்க் கையில் ஒருவகைத் தம்புரு என்னும் இசைக்கருவிகொண்டு பாடியாடிப் பிழைக்கின்றனர். மற்றும், இவ்வகையினர் இந்நாட்டின்கண்ணேயன்றி ஸ்காட்லெண்ட் (Scotland) முதலிய சில மேற்புலத்தேயங்களிலும் பன்னூண் முன்னர் இருந்தனவென்பது சில ஆங்கில நூல்களான் அறியப்படும். அவரை Bards எனவும், இவ்வகைப்பாடலை Pastoral Ballads அல்லது Pastoral Poem எனவும் கூறுவர். Idyls என்னும் ஆங்கிலப் பாடலும் இவ்வகையைச்சாரும் என்பர்.

தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலின் "தாவி னல்லிசை" யென்னுஞ் சூத்திரத்து,

“ கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி ”

என்றவிடத்து, ‘ ஆடன் மாந்தரும் பாடற் பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியுமென்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம்

16

பெறுமாறு கூறிய கூறுபாடும்’ என்பதும், கூத்தராயிற் பாரசவரும் * வேளாளரும் பிறரும் அவ்வாடற்றொழிற்கு உரியோர்களும் பாரதி விருத்தியும் விலக்கியற்கூத்தும் கானகக்கூத்துங் கழாய்க் கூத்தும் ஆடுபவராகச் சாதிவரையறையிலர்’ என்பதும் ஆசிரியர் நச்சினார்க்கினியருரை.

ஆற்றுப்படை. இன்னதென்பது முற்குறித்த

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்னுஞ் சூத்திரத்துரையில், 'தான் இறைவனிடத்துப் பெற்ற கர்தழியாகிய செல்வத்தை யாண்டேர் திரிந்து பெறாதார்க்கு இன்னவிடத்தே சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச்சென்று அக்கர்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும்' எனவும், " பக்கம் " என்றதனானே, அச்செய்யுட்களைக் கூத்த ராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலி யாற்றுப்படை, முருகாற்றுப்படை

யெனவழங்குதலும், ஆற்றினருமையும் அவனூர்ப்பண்பு முதலியனவுங் கூறுதலுங் கொள்க ' எனவும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியவாற்றான் அறியப்படும்.

"புரவலன் பரிசு கொண்டு மீண்ட
விரவலன் வெயிறெறு மிருங்கா
னத்திடை
வறுமை புடன்வருடம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கந்தப்
பாவல னூர் பெயர்கொடை பராஅ
யாங்குநீ செல்கென விடுப்பதாற்
றுப்படை"

---

* ம-ள-ள-ஸ்ரீ, சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் அச்சிட்ட பொருளதிகாரத்தில் 'பாரசைவர்' என்றிருக்கின்றது. இச்சொல், பல பிரதிகளால் 'பாரசவர்' என்றிருத்தல் வேண்டுமெனத் தெரிகின்றது. அதுகேட்டுணர்க. பாரசவர்-நச்சினார்.

" ஓங்கிய வருதா ணகவலின் வருமே "

என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களும்,

" அரசர் பாவா லாற்றுப் படைமே
லுரைசெய் தலைபெயன் றோர்ந்தனர் கொளலே
"

என்னும் இலக்கணவிளக்கச் சூத்திரமும் ஆற்றுப்படை,
யின் இலக்கணத்தை ஒருவாறு வரையறுத்தமை காண்க. காட்டிய இலக்கணங்களான், ஆற்றுப்படை யென்பது ஈண்டுக்
பரிசில்
.பெற்றுப் பெருஞ் சிறப்பெய்தி வருவானொருவன் வறுமைத்துயர் கூர்ந்து வழியிடை எதிர்ப்பட்ட மற்றொருவனுக்குப் பரிசில்வழங்கிய இறைவனது நாடு கொடை முதலியவற்றைப் புகழ்ந்து,
ஆண்டுச்செல்லின் தான்பெற்ற பெருஞ்செல்வமும் பெருஞ்சிறப்பும் எய்தலாகும் எனக்கூறி அவனை வழிப்படுத்தல் என்பதும்,

ஆற்றுப்படைதான் அகவற்பாவா ன் வ
ருமென்பதும் பெறப்பட் டன. அகவற்பாவான்
வருமென்றாராயினும் " ஆசிரிய நடைத் தேவஞ்சி
" என்றதனால், இப்பாட்டு வஞ்சிப்பாவினடியும்
விரவப் பெற்றதென்றறிக. வஞ்சியடிகளை 178-ம்
அடி முதலியவற்றிற் காண்க. இவ்வாறு கூறிய
இலக்கணவமைதியை இப்பொருநராற் றுப்படையுட்
கண்டு தெளிக.

பொருநராற்றுப்படை என்பது மூன்று
சொற்கள் இரண்டு
தொடராய் வந்தபெயராம். பொருநரை
ஆற்றின்கண் படுத்தது
எனு விரிதலான் முன்னது இரண்டாம்
வேற்றுமைத் தொகையும்
பின்னது எழாம்வேற்றுமைத் தொகையுமாம்
என்க. பொருநர்:
இதன் பகுதி-பொருந. ஆற்றுப்படை: இதனை
ஆறு + படை எனப்

பிரிக்க. படை: படு-பகுதி ; ஐ-தொழிற்பெயர் விகுதி. பொரு
ஆற்றுப்படை என்னும் தொடர்மொழி செய்யுளுக்காயினது

காரணக்குறியாம். இவ்வாற்றுப்படையில் "பொருந" (3-ம் அடி) என்று ஒருமைப்பாலால் விளித்து மேல் "முன்னிற்குவிராயின்" (150-ம் அடி) என்று பன்மைப்பாலோடியைத்தது ஒருமைப்பா லொடு பன்மைப்பால் மயங்கிய வழுவன்றோ வெனின் அன்று என் பதை

2

18

"முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல்
வேண்டும்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு 'முன்னிலை குறித்து நின்ற ஒருமைச்சொல் பன்மையொடு முடிந்ததாயினும் வரையப் படாது.

அம்முடிபு ஆற்றுப்படைச செய்யுளிடத்துப் போற்றி புணரப்படும்' எனச் சேனாவரையர் உரை கூறி, கூத்தராற்றுப் படையுள் "கலம்பெறு கண்ணுள ரொக்கற்றலைவ" என நின்றவொருமைச் சொற்போய், "இரும்பே ரொக்கலொடு பதமிகப்பெறுகுவிர்" என்னும் பன்மைச் சொல்லொடு முடிந்தவாறு கண்டுகொள்க' என உதாரணங் காட்டியதனால் உணர்க.

கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, புலவராற்றுப்படை, விறலியாற்றுப்படை என்பன இந்நூல்வகையைச் சார்ந்தனவையாம்.

——(•)——

II. நூலாசிரியர்.

1. இவர் நாடுமுதலியன.

மூ. த்தாமக் கண்ணியார்: இவரது நாடும் ஊரும் வருணமும் சமயமும் பிறவும் நன்கறிதற்குரிய கருவியொன்றுங் கிடைத்திலதாயினும் இவரது பாட்டினுட் காணப்படும் சில குறிப்புக்களைக் கொண்டு இவர் இன்ன நாட்டினர் இன்ன மரபினர் இன்ன மதத்தினர் இன்ன காலத்தினர் என்பது ஒருவாறு ஊகிக்கப்படும். பண்டைக்காலத்துப் பாவலர் காவலர் சரிதங்களை நம் முன்னோர் எழுதிவையாதது இத் தமிழகத்தினுக் கோர் பெருங்குறையே, அப் பெருந்தகை மக்களது சரித்திரங்களின் ஒரு சில குறிப்புக்களை அறிதற்குச் சில சிலாசாஸனங்களும் அன்னோர் செய்துவைத்த சில பாடல்களும் ஒருசார் துணைசெய்கின்றனவேயன்றி ஐயம் திரிபற விளக்கிக் கோடற்குத் தக்க சான்று வேறு கிடைப்பதில்லை. இப் புலவர் பெருமானது நாடு முதலியன இன்னவாறென்பதை இப் பாட்டினுட் புகுந்து காண்போம்.

19

" மாமாவின் வயின்வயினிற்

ரூழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினான்"—(180-182)

என்னுமிடத்து, 'ஒருமா நிலத்தில் ஒருமா நிலத்தில் தாழ்ந்த தெங்கினையுடைய குளிர்ந்த மரச்சோலைகளி லிருக்கின்ற நெற்கூடு விளையுடைய குடிமக்கள்' என்றார். ஈண்டு 'மா' என்றது நூறு குழி கொண்டதெனவும்,குழி பன்னிரண்டு சதுரவடிகொண்டதெனவும் சோழநாட்டினர் கூறுவர். ஆகவே, இது சோழநாட்டு வழக்காம்.

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாக"—(246-247)

என்னுமிடத்து, 'வரம்பு கட்டின வேலி நிலம் ஆயிரக்கலமாகிய செந்நெல்லின் விளையுளை உடையதாக என்றனர்.' ஈண்டு, 'வேலி' என்றது இரண்டாயிரங் குழி கொண்ட நிலம் என்பர். இதுவும்சோழ நாட்டு வழக்கேயாம். இவற்றான், இந்நூலாசிரியர்

சோழநாட்டினராதல் வேண்டும் என்பது ஊகித்தறியக் கிடந்த தென்க. இவை போன்ற சிற்சில குறிப்புக்கள் இந்நூலினுட் சோழ நாட்டு மருதநில வருணனையின்கண்ணும் காவிரியாற்றுச் சிறப்பின்கண்ணும் புலனாகும்.

இவரது வருணம் இதுவாதல் வருமாறு.

"கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
"—(117-118.)

என்னுமிடத்து, 'எம்முடைய பற்கள் கொல்லை நிலத்தே யுழுத கொழுவை யொப்பப் பகலு மிரவும் இறைச்சியைத் தின்று முனை மழுங்கி' என்றதனால், புழுதியில் உழுதாற் கொழு முனை மழுங்கு மென்பது போந்தது. புழுதிக்காலில் உழுஞ் செயலையும் அங்ஙனம் உழுதலாற் கலப்பையின் கொழுமுனை மழுங்கு மென்னும் உண்மையையும் இவர் நனித்தறிந்து கூறுதலால் உழுதொழிற்பயிற்சி மிக்குடையரென்பது தோன்றுகின்றது. ஆகவே, இவர் சான்றோர்வதான வேளாளர் வருணத்தவர் என்பது ஊகிக்கப்படு மென்க.

இவரது சமயக் கொள்கை.

" காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை"-(52)

என்று, 'காட்டின் கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மன மகிழ்ச்சியாகச் செய்யும் முறைமைகளைச் செய்துவிட்டபின்பு,' என்றார். இவர் கடவுள்வழிபாடுடைய ரல்லராயின் இங்ஙனங் கூறுரொக. ஆயினும், இன்ன கடவுளைக் கொண்ட இன்ன சம யத்தினரென்று துணிதற்கிடனில்லை. இந்துமதக் கோட் பாட்டைச் சார்ந்தவரென்பது ஒருவகையான் உணரர்பாலதாம். பிரம சூத்திரங்கட்கு ஸ்ரீபகவத்பாத ராமாநுஜ மத்வாசாரியர்

தொடக்கமான பெரியார் பாடிய மியற்றி வைதிக மத சித்தாந் தத்தைப் பரவச் செய்தது சற்றேறக்குறைய ஓராயிர வாண்டுகளிற் கிப்பால் என்பவாகலின் அவர் காலத்திற்கு ஓராயிரவாண்டு முன் னர் நிகழ்ந்ததாகப் பல நியாயவாயிலான் அறியப்படுகின்ற கடைச் சங்கக்காலத்து மத வேறுபாடுகளும் அவற்றானாகும் வைஷம்யங் களும் இல்லையாகவே, இவ்வாசிரியரும் அக்காலத்தினராதல் பற்றி இவர்க்குச் சமய வைஷம்யம் இல்லை என்பது துணியப்படும். இவ் வுண்மை அக்காலத்து ஏனைய நூல்களானுந் தெளியக் கிடத்தல் அறிக. இனி, இவ ர் பெயரமையை ஆராயுமிடத்து, சிவனை வழிபடுவோராகலாம் என்னுங் குறிப்பிற்கு இடனுளது; அது வரு மாறு:
'முடத்தாமக்கண்ணியார்' என்னும் பெயர் முடமாகிய மலர் மாலையுடையார் என்னும் பொருளினைக் கொண்டதாம். முட மாவது வளைவு. கொன்றைமலர் வளைந்து

சுருண்டிருத்தலால் அம் மாலையுடையார் என்பது சிவபிரானைக் குறிக்குமென்க. எனவே, அப்பெயரே இவருக்கு வழங்கியிருத்தல் கூடும்.

இக்காலத்து மக்களுக்குப் பெரும்பான்மையாக இட்டு வழங்கும் தெய்வப் பெயர்கள் அக்காலத்துப் புலமைசான்றோர்க்குச் சிறுபான்மை வழங்கப்பட்டு வந்தன வென்பதூஉம், இக்காலத்து மக்களுக்கு அரியனவாக வழங்கும் இருடிகள் பெயர்கள் அக்காலத்துப் புலவர்க்கு வழங்கி வந்தனவென்பதூஉம், இன்னும், மக்கட்கு ஊர் பற்றியபெயர்களும், குலம்பற்றிப் போந்த பெயர்களும், தொழில் காரணமாக வந்தபெயர்களும், மற்றும், சிலபுலவர்க்கு அவ

ரவர்பாடலிற் சிறப்பாகத் தோன்றிய சொற்றொடரால் அமைந்த பெயர்களும், இவை போன்ற வேறு பெயர்களும் அந்நாளில் உள்ள

செந்நாப் புலவர்க்கு வழங்கப்பட்டு வந்தன வென்பதூஉம், புற நானூறு, அகநானூறு குறுந்தொகை நற்றிணை முதலிய பண்டைச் செந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடையார்க்குப் புலப்படும். மேற் கூறிய பெயர்களிற் சில உதாரணமாகக் காட்டுவாம்:—

தெய்வப்பெயர்கள்:—தாமோதரனார். உருத்திரனார். பெருங்

கந்தனார்.

இருடிகள் பெயர்கள்:—கபிலர். கோதமனார். மார்க்கண்டே

யனார்.

வடிவுபற்றிய பெயர்கள்:—முடவனார். நெடுங்கழுத்துப்பர

ணர். நெட்டிமையார்,

குலம்பற்றிய பெயர்கள்:—இளவெயினி.
தொழிலாற் போந்த
பெயர்கள்:—அறுவைவாணிகன் இள

வேட்டனார். கூலவாணிகன் சாத்தனார்.
அவரவரது சொற்றொடரின் சிறப்பால்
வந்தபெயர்:—இரும்

பிடர்த்தலையார்.

"கயிறுபிணி கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து
மருந்தில் கூற்றந் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி." *

[புறம்—3]

இவ்வாறே, ஆடுதுறை மாசாத்தனார், ஊன்பொதி பசுங்குடை யார், இளம்பொன் வாணிகனார், கருங்குழலாதனார், கழைதின் யானை யார், தாயங்கண்ணியார், எயிற்றியனார், பெருந்தலைச் சாத்தனார், பேரெயின்முறுவலார், மதுரைப் பேராலவாயார், தொடித்தலை

விழுத்தண்டினார் முதலிய பெயர்களை நும் புறநானூற்றுப் பகுதியுட் காண்க.

* கன்னிக்கட்டியவந்தின் விவரத்தைச் 'செந்தமிழ்'த் தொகுதி 1-பகுதி 9-ம் கண்டு தெளிக.

மற்று, இவர் இன்ன மனக்கோட்பாட்டினையுடையரென்பதை கீழ்க்குறிக்கு மடிகளும் அவற்றின் உரையும் புலப்படுத்தும்:

"தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
தன்பய மெய்திய வளவை மான:"

இவை இந்நூலின் 91-92-ம் அடிகள். 'மிக்க தவத்தைச் செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ் செய்த உடம்பைப் போகடாதே யிருந்து அத்தவத்தாற் பெறும் பயனைப் பெற்ற

தன்மையை யொப்ப' என்பதும், 'மக்கள்' என்றது 'மாக்க' ளென்றார் வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்' என்பதும் இவற்றின் உரை. இதனால், செல்வம் முதலிய பேறுகளை அடைதற்குத் தவம் சாதன மென்பதும், இந்திரியாதியரின்பங்களினும் வீட்டின்பமே சிறந்த தென்பதும், மக்கள் அடைதற்குரிய பேறு வீட்டினும் மிக்கதொன் றில்லை யென்பதும் பெறப்பட்டன. ஆகவே, இவ்வாசிரியர் புருஷார்த்தப் பேற்றிற்குத் தவமே சிறந்த சாதனமென்னும் கோட்பாட் டினையுடையார் என்பது போந்தது.

2. இவர் நாகரிகரேன்பது.

"செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக"—(121-122)

ஈண்டு, அரசனுக்குப் பொருளாது பிரிவு துன்பஞ் செய்யு மெனக்கொண்டு 'மெல்லெனக் கிளந்தனமாக' என்றார். இதனால், அரசர் முதலிய

செல்வநிலை யுடையாரிடத்து ஒழுகலாகும் முறை யினைக் குறித்தார்.

" காலி னேழடிப் பின்சென்று
கோலின்
தாறுகளைந் தேறென்
றேற்றி"—(166-167)

இங்கு, 'காலால் ஏழடித்தூரம் பொருநனுக்குப் பின்னேசென்று' எனவே, செல்வம் மிக்க அரசர் முதலியோரும் அறிவுடை யாரைப் பெருமைப்படுத்தி யொழுகுமாறும், குதிரையின் கடுவி சைக்குப் பொருநன் ஆற்றானென்று கருதிச் செலவு முடிக்கும் தேரைப்போக்கி, அவனுக்கு ஏறுமிடத்தையும் ஏறும் விதத்தை

யும் காட்டினன் எனவே, அரசர் பொருநன்

முதலிய பரிசிலரிடத் துக் கொள்ளும் அன்பும் ஆதரமும் மரியாதையும் விளங்கின. இவ்வகை யொழுக்கம் நாகரிகரான நன்மக்களிடத்தே உளதாமாதலின் இதனை அழகுபெறக் கூறிய இவ்வாசிரியர் அவ்வொழுக்க முடையராதல் உணரப்படும்.

3. இயற்கைப்பொருட்டன்மையில் இவர் நுணுகிய ஆராய்ச்சி யுடையரென்பது.

"குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்

....

மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை"—(4-22)

பாலையாழையும் அதனுறுப்புக்களையும் சிறப்பிக்கின்ற இவ்வடி களில் ஒன்றோடொன்று சம்பந்தம் சிறிதும் அறியப்படாத பொருள் களையெடுத்து அவற்றின் தன்மைகளை நுனித்தறிந்து பொருந்துமாறு அவற்றை உவமமாக்கி, கூறவந்த

பொருளுக்குத் தெளிவும் அழகும் செய்வதாகிய செய்கை எத்துணை வியப்பையும் மகிழ்ச்சியையும் விளைக்கின்றது. மான்குளம்பழுத்திய இடமும், விளக்கினதுநிறமும், மகளிர் வயிற்று மயிரொழுக்கும், நண்டின் கண்ணும், அஷ்டமி சந்திரனும், தலையெடுத்துப் படம் விரித்த பாம்பும், முன்கையில ணியுந் தொடியும், குத்திய தினையரிசியும், மணக்கோலம் பூண்ட பெண்ணும் ஆகிய இப்பொருள்கள் யாதோடு என்ன சம்பந்த முடையன ? எவ்வகைச் சம்பந்தமு முடையனவாகப் புலப்படவில்லையே! மான்குளம்பழுத்திய இடத்தை இரண் டருகுந் தாழ்ந்து நடு வுயர்ந்த பத்தலுக்கும், விளக்கழலின் நிறத்தை யாழினது தோற் போர்வையின் நிறத்திற்கும், வயிற்றினது மயிரொழுங்கை இரண்டு தலையுங் கூட்டித் தைத்த மூட்டிற்கும், நண்டின் கண்ணைத் துளை வாயி லடைத்த சிறிய ஆணிக்கும், அஷ்டமிசந்திரனை உள்ளீடில்லாத அதன் வளைந்தவாய்க்கும், உடலை நிறுத்தித் தலையெடுத்துப் படம் விரித்த பாம்பின்

தோற்றத்தை அகன்ற குடத்தை ஒரு புறத்திலுடைய அவ்யாழின் தண்டினுக்கும், முன்கையில் அணியும் தொடியைச் சாம்பு துவக்கப்படும் பிணிப்பினையுடைய திவவென்னும்

உறுப்பிற்கும், இனையினது குத்தித் தீட்டியெடுத்த அரிசியை நரம்பின் முறுக்கினுள தாம் முடிச்சிற்கும், சிறந்த ஆடையணி முதலிய வற்றால் அலங்கரிக்கப்பெற்ற மணப்பெண்ணின் அழகிய தோற்றத்தை மேற்கூறிய பல வுறுப்புகளாலும் அழகு பெற்று விளங்கும் யாழிற்கும் உவமங் கூறிய நயத்தை உன்னுந்தோறும் உன்னுந் தோறும் வியப்பும் மகிழ்ச்சியும் விளைகின்றன. அன்றியும், "வயிற் றைதுமயி ரொழுகிய தோற்றம் போல" என்ற விடத்து, சிவந்த நிறமுடைய வயிற்றில் மயிரொழுங்கு நன்கு

விளங்கு மாதலின் அவ்

வயிற்றைச் "செய்யோளவ்வயிறு" என்று சிறப்பித்த அழகு மிகுதியும் பாராட்டற்குரியதாம். இதுபோலும் நட்பவாராய்ச்சி பாடினியை வருணிக்குமிடத்தும், ஆற்றுப்படுக்கும் பொருநன் தனது வரலாறு கூறுமிடத்தும், காவிரிநதியைச் சிறப்பிக்குமிடத்தும் ஆங்காங்குப் புலப்படுதல் அறிக.

4. இவரது அநுபவ ஞானம்.

ஆற்றுப்படுக்கும் பொருநன் தனது வரலாறு கூறுமிடத்து, வறுமைத்துன்பத்தைக் கூறப்புக்கு,

"ஈரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர்"

என்று ஏழைமையின் கொடுநிலையைக் கூறினர். ஊணுடை வேண்டி உழன்று திரியும் வறியவ ருடுத்த துணி அழுக்கு மிக்கேறி ஈரும் பேனுங் கூடிக் கொண்டு வேர்வையில் நனைந்து பார்ப்பவர்க்கு அருவருப்பை விளைக்கு மென்பது அனுபவசித்த மன்றோ? வறியாரது இத்துன்ப நுகர்ச்சியை அனுபவத்திற்கண்டு படிப்பவர் சிந்தையிற் றைக்குமாறு கூறுமாற்றல் வியக்கத்தக்கது. இது போலும் செய்கை இந்நூலுட் பிறவிடங்களிலும் காணலாம்.

25

5. பொருட்கேற்ற ஓசை.

"துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராஅரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெய் தொற்றி"—(103-106.)

இவ்வடிகளில், சுவையுண்டாக இனிது பக்குவப் படுத்திச் சமைத்த உணவைக் கூறவந்த ஆசிரியர் தடைபடாது கண்ணாடி மேல் மொழுமொழுவென்று உருண்டு செல்லும் உழுந்து போலச் சொற்கள் நாவிலும் பல்லிலுந் தண்டி

இடர்ப்படாமல் இழுமெ னும் ஓசைகொண்டு இனிய நடைபெற்றிருப்பதும்,

"அகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த
நோக்கமொடு."—(123-124)

ஆற்றுப்படுக்கும் பொருநன் தன்வரலாறு கூறிவருங்கால் தனது ஊரைநினைந்து கரிகாற் பெருவளத்தானிடம் தனக்கு விடை கொடுத்தனுப்பும்படி கேட்க, அவன் பொருநனது பிரிவினையாற்றாது அவன்பால் அன்பி னெழுந்த சீற்றத்தைக் காட்டு வான்போலச் சொல்லிய மாற்றத்தைக் கூறவந்த இவ்வடிகளில் ஒவ்வொரு சொல்லிலும் உடன்றெழுகின்ற வல்லோசை தோன்றி வலிய நடை அமைந் திருப்பதும், சோழநாட்டின் வளமும் திணை மயக்கமும் கூறும் "திரை பிறழிய விரும்பௌவத்து" என்பது முதலான அடிகளில்

ஆங்காங்கு வரும் பொருள்களோடு ஒற்றுமைப்பட்டு ஓசையும் அமைந்திருப்பதும் உணரப்படும். இச்செய்கை ஆங்கிலத்திலும் உண்டு. டெனிஸன் (Tennyson) என்னுங் கவிஞரது.

"From cataract to cataract"

என்னின்ற சொற்றொடரை நோக்குக.

sense echo' என்பர்.

சண்டு, 'Sound and

6. முறையின்வைப்பு:

இவ்வாசிரியர் இப்பாட்டினுட் கூறும் விஷயங்களிற் பொருள்களை ஆங்காங்குக் காரண காரிய முறைப்படி அமைத்துப் போனௌர். இதற்கு உதாரணமாக ஒன்று காட்டுவோம்:

"......................................நீர்வாய்த்

தண்பணை தழீஇய தளரா விருக்கை
"—(168-169)

இதன்பொருள் : நீரை எப்பொழுதுந் தன்னிடத்தே யுடைத் தாகிய தண்ணிய மருதநிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்பினை யுடைய (ஊர்கள்.)

ஈண்டு, முதலில் 'நீர் வாய்' என்றதனால் நீர் வளமும், 'தண்பணை' என்றதனால் அந்நீர்வளத்தாலாகும் நிலவளமும், 'தளராவிருக்கை' என்றதனால் அந் நீர்வள நிலவளங்களான் உளதாம் குடிவளமு மாகிய இவை காரண காரிய முறையே வை க்கப்பட்டமை புணரத்தக்கது. இவ்வாறே, இப்பாட்டினுட் பிறண் டுங் கண்டுகொள்க.

7. நூற்பெயரைக் கதைப்போக்கினிற் குறித்தல்:

"அறியா மையின் னெறிதிரிந் தொரஅ
தாற்றெதிர்ப் படுதலும் நோற்றதன்
பயனே"—(58-59)

ஆற்றின் (வழியின்) எதிர்ப்பட்ட பொருநனை மற்றொரு பொருநன் ஆற்றுப் படுக்கும் செய்தி இவ் வடிகளாற் குறிக்கப் பட்டது. இஃது இப் பொருநராற்றுப்படையின் முக்கிய விஷயமாதலின் இந்நூலின் பெயர் இவ்வடிகளிற் குறிப்பினாற் பெறப்படுமாறு அமைந்து கிடந்தமை அறிதற்பாலது. இவ்வாறே,

"சிறந்தா ருளரே லுரையாயாற் சிந்தா
மணியே கிடந்

தியால்"

எனச் சீவகசிந்தாமணி காமகனிலம்பகத்துத் திருத்தக்க தேவர் அந்நூற் பெயரை அழகுபெற அமைத்தமையும் காண்க.

8. உலகவழக்குரை

அமைத்தல்:

சிலவிடங்களில், படிப்பவர்க்கு உள்ளத்தில் வென்றி நின்று உணர்ச்சியை எழுப்புமாறு சமயோசிதமான பழமொழிகளை அமைத்துக் கூறிப் போதல் புலவரதியல்பு. —சிந்தாமணி, இராமாயணம்

முதலிய நூல்களில் இச்செய்கை இனிது புலப்படும். இந்நூலாசிரியர், பொருநன் முன்பு தானுற்ற வறுமைத் துயரை அறிவுறுத்த வந்தவிடத்துப் படிப்பவரது உள்ளம் நெகிழ,

" ஈரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவரநீக்கி "

என்று ஓர் உலகவழக்குரைமேல் வைத்துக் கூறினர். 'ஏழை தலையில் ஈரும் பேனும்' என உலகத்தில் வழங்கிவரும் வழக்குரையைக் காண்க.

9. இயற்கைப் பொருளை இனிது புலப்படுத்தல்:

தன் வரலாறு கூறிவரும் பொருநன் கரிகாற்பெருவளத்தானிடம் பெருஞ் சிறப்பெய்தி முன்னைய வறிய நிலைபோய் வேறுபட்ட நிலையில் தன்னைத் தானே அறியமாட்டாது மயங்கிய செய்தியைச் சொல்ல வந்த புலவர்,

"கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா விளைஞர் சொல்லிக் காட்ட"—(97-100)

என உருமாறிய பொருநனுக்கு அக்காலத்து உளதாகிய மயக்கமும்; சோழநாட்டு வளமும்

இணைமயக்கமும் கூறப்பட்டது,

" திரைபிறழிய இரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த அகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெற்
றாழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினாற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்க

ணீற்றியாமைதன் பார்ப்போம்பவு
மிளையோர்வண்ட லயரவும்"—(178-187)

என்னுமடிகளில், கடலி னலைகள் ஒலித்து முரிந்து விழுந் தன்மையும்; ஒருமாநிலத்தோறும் ஒருமாநிலத்தொறும் கட்டி வைக்கப் பட்ட

நெற்கூடுகள் பொலியும் இயல்பும்; அடுக்கடுக்கான தென்னஞ் சோலையின் அமைதியும்; அச் சோலைகளைச் சார்ந்த குடிமக்களது இருப்பும்; உதிரத்தாற் சிவந்த பலிச்சோற்றைத் தின்று திருப்தி யடைந்த காக்கை பின்பு பசித்தகாலத் துண்ணலாமென்று அக் குடியிருப்புக்களைச் சூழ்ந்துள்ள நொச்சிப் புதரினுள் உள்ள யாமைப் பார்ப்பைப் பாதுகாத்துவைக்கும் செய்தியும்; நெற்கதிர றுப்போர் செய்தியைச் சொல்லுமிடத்து,

" கூனிக் குயத்தின் வாய்நெல்
லரிந்து"—(242.)

என, கனக்கக் காய்த்துக் கதிர் முதிர்ந்து தரையிற் சாய்ந்த நெற்றாள்களை அறுக்கப்புக்க மாக்கள் குனிந்துநின்றே அறுக்கும் இயல்பும் படிப்பார்க்கும் கேட்பார்க்கும் இன்றுதான் நிகழ்வன போலக் காட்டி, இயற்கையின் நிகழ்ச்சியை உள்ள துள்ளவாறே உரைக்கும் அழகு வியக்கற்பாலதாம்.

இன்னும்இவைபோலும் சிறப்புக்கள் மற்றுஞ்சில இந் நூலினுள் ஆங்காங்கு அழகுற அமைந்து பாட்டை வளனுறுத்திக் கற்பார்க்கு மகிழ்ச்சியை விளக்கும் கவித்திறமையைக் கண்டு கொள்க.

III:—பொருள் விளக்கம்.

1. கருத்து.

பொருந! சுவைமிக்க சோற்றிற்கு ஊருராய்ச் சுற்றுகின்றனை;

வறுமையை அடியோடே யொழிக்குமாறு அறிகிலாய், இலக்கணம் நிரம்பிய அழகும் மென்மையும் வாய்ந்த பாடினி வழிநடை வருத்தம் பொறுத்து கடும்பசியிற் காட்டிடைத் தங்கிக் கல்லையும் கரைக்கும் இனிமையுடைய யாழை வாசித்துத் தேவபாணியைப் பாடிச் [illegible] [illegible] வழித்த பின்பு, வழியறியாது வேறு

வழியிற் போகாதே இவ்வழிவந்து என்னை

எதிர்ப்பட்டது நீமுற் பிறப்பிற் செய்த நல்வினைப் பயனேயாம். யான் கூறுவது* கேட்டு உடனே எழுந்து செல்வாய்.

ஈண்டுச் செல்வமெய்தியிருக்கும் யான் முன்பு உன்னைப்போல வறுமையிக்கிருந்தவனே. கரிகாலன்பாற் சென்றதனால் எனது வறுமை அடியோடே கெட்டது. அவனைப் பொருநர் காண்பது எளிதே. பொருநர் அவன்கோயில் புக்காற் றடுத்து யாரென்பாரிலர். அவன்கோயிலையடைந்து உடுக்கையொலியெழுப்பி என் வருகையை யான் தெரிவிக்க, உடனே வெளிவந்து முன்னே பழகின நண்பனைப்போலஉபசரித்து அழைத்து இருக்கை ஈந்து ஆடை நல்கிக்கள்ளும் இறைச்சியும் கழுத்தளவும் உண்பித்து அன்று தொட்டுக் குறைபாடொன்றுமின்றி ஆதரித்துவந்தான். அவ்வாறு பலநாள் கழிய,இறைச்சிதின்று பல்மழுங்கினயானே எனது ஊருக்குப்போக வேண்டுமென்று ஒருநாள்

தெரிவித்தேன். பிரிவிற்கு உள்ளிப் பின் யானைகளையும் ஊர்திகளையும் ஆடையாபரணங்களையும் மேன் மேலே தர அவற்றுள் எனக்கு வேண்டுமென அறிந்தவற்றை வாரிக்கொண்டு வந்தேன். எனது செல்வ மிகுதியைக் காண்பாய். தமிழரசர் மூவரும் நட்புற்று ஓரவைக்கண் இருந்தாலொத்த காட்சி கண்டென்பா லுளதே.

நல்ல முகூர்த்தத்தே அரசுரிமை பெற்றுப் பிறந்து வளர்ந்து இளமைப்பருவத்திலேயே சேரபாண்டியர்களை ஒருகளத்தே வென் றானும்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென நாற்பாற்பட்ட காடுகளையுடையதாய், வான்வழங்காது வற்கடமிக்க காலத்தும் பொய்க்காது காவிரி பாய்தலாற் செஞ்சாலி வேலிக்கு ஆயிரங்கல மாக விளைதலையுடையதாயுள்ள சோழநாட்டினைத் தனக்கே யுரிமை யாயுடையானும்;

தண்ணளிகூர்ந்து செங்கோல் செலுத்தி வழக் கறுத்து உலகை யரசுவாளும் ஆகிய ஆத்திமாலை சூடிய கரிகாற் சோழனை நீயடைந்து வணங்கி வறுமைதோன்ற நின்றாயாகிற் பரிவோடு பார்த்துப் பட்டாடை நல்கிப் பாடினிக்குக் கூந்தலிற் சூடப் பொன்னாற்செய்த தாமரைப்பூவும் கழுத்திலணியப் பொன் னரிமாலைமுத்துமாலைகளும் அளித்துமணமிக்கதேறலும்வெறுப்புத்

தோன்ற மேன்மேற் பருகுவித்து வருவான். பலநாட்கழித்து, நீ உனது ஊருக்குப்போக நிச்சயித்தாற் பிரிவிற்கு வருந்துவானாகி அவ்வாறு நிச்சயித்தவுடனே உன்பின் ஏழடி வந்து வழிவிட்டுத் தேரி லேற்றிச்சில பரிசிலுதவிப் 'போய்வாரு'மென்று விரைவில் விடாது, 'செல்வ முதலிய நிலையா; புகழொன்றே நிற்பது. ஆகவே நீரும் வருவாயாகப்பெற்ற பொருள்களைப் பலர்க்குக்கொடுத்துப்புகழொடு போக' எனக்கூறி வளமிக்க நாடுகளும் இனமிக்க யானைகளும் தந்து விடுவனென்ப தொருதலை.

பொருநனை விளித்தல்.

அறாஅ யாணர் அகன் தலைப் பேர் ஊர்
சாறு கழி வழிநாட் சோறு நசையுறாது வேறு
புலம் முன்னிய விரகு அறி பொருந! (3) பாடல்
பற்றிய பயன் உடை யெழாஅற் கோடியர்
தலைவ! (57) புகழ்மேம் படுந! (60)

எழின் கிழவ! (63)

பாடினி கேசாதிபாதவருணனை.

அறல் போற் கூந்தல், பிறைபோற்
றிரு நுதல், கொலைவிற் புருவத்து, கொழுங்கடை
மழைக்கண், இலவு இதழ் புரையும் இன்மொழித்
துவர்வாய், பலஉறு முத்திற் பழிதீர்வெண்பல்,
மயிர் குறை கருவி மாண்கடை அன்ன பூங்குழை

ஊசல்பொறை சால் காது, நாண் அடச்சாய்ந்த கலங்கிளர் எருத்தின், ஆடு அமைப்

பணைத்தோள், அரிமயிர் முன்கை, நெடுவரைமிசைஇய காந்தள் மெல் விரல், கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள் உகிர், அணங்கு என

உருத்த சுணங்கு அணி ஆகத்து..., நீர்ப் பெயர்ச்சுழியின் நிறைந்த

கொப்பூழ், உண்டென உணரா உயவு நடுவின், வண்டு இருப்பு அன்னபல்காழ்...,இரும்பிடித் தடக்கையிற் செறிந்து திரள் குறங்கின், பொருந்து மயிர்ஒழுகிய திருந்து நட்கு ஒப்ப பெருந்தகு வருந்து காய் காவிற்சீறடி(42) பெடைமயில் உருவிற் பெருந்தகு பாடினி(47)

31

அவள் வழிநடை வருத்தம் போறமை.

அரக்கு உருக்கு அன்ன செந்நிலன் ஒதுங்கலின் (43) சீறடி (42) பரற்பகையுழந்த நோயொடு சிவணி (44) மரல்பழுத்தன்ன மறுகுநீர் மொக்குளால் (45) எவ்வந்தாங்கி (50)

நன்பகல் அந்தி நடை இடை விலங்கலில் (46).

அவள் நிழலில் தங்குதல்.

நாடொறுங் களிறு வழங்கு அதர்க்கானத்து
(49) இலை இல் மராத்த வலைவலந்தன்ன
மென்னிழல் மருங்கின் (51) அல்கி (49)

பாலையாழ் வருணனை.

குளப்பு வழி அன்ன கவடுபடு பத்தல், விளக்கு அழல் உருவின் விசி உறுபச்சை, எய்யா இளஞ்சூற் செய்யோள் அவ்வயிற்று ஐது மயிர் ஒழுகிய தோற்றம்போலப் பொல்லம் பொத்திய பொதி யுறு போர்வை, அளை வாழ் அலவன் கண் கண்டன்ன துளைவாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி, எண்ணாள் திங்கள் வடிவிற்றாகி அண்ணா இல்லா அமைவரு வறுவாய், பாம்பு அணர்தன்ன ஓங்கு இருமருப்பின், மாயோள்

முன்கை ஆய்தொடிகடுக்கும் கண்கூடு இருக்கைத் திண்பிணித் திவவின், ஆய்தினையரிசி அவையல் அன்ன வேய்வை போகிய விரல் உளர் நரம்பின், கேள்வி போகிய நீள்விசித் தொடையல் மணங்கமழ் மாதரை மண்ணி அன்ன அணங்குமெய்ந்நின்ற அமைவரு காட்சி, ஆறு அலை கள்வர் படை இட அருளின் மாறுதலை பெயர்க்கும் மருவு இன் பாலை

யாழை, (22)

வாசித்தன் முறை.

வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும் (23) (வாசித்து)

பாடற் சிறப்பு.

பாடின பாணிக்கு ஏற்பச் (48) சேருடை நன்மொழி சிதறி (24)

நீரொடு

காடுறை தெய்வத்தின் கடன் கழித்தல்.

காடுறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை (52)

32

எதிர்ப்பட்டதன் அருமையும் பயனும் கூறுதல்.

அறியாமையின் நெறிதிரிந்து ஒரா அது (58) *ஆற்றெதிர்ப்படுதே னும் நோற்றதன் பயனே* (59) *போற்றிக் கேண்மதி* (60) *ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு நீடுபசி ஒரா அல் வேண்டின் நீடு இன்று எழுமதி* (63) *வாழி* (63)

அனுபவம் கூறுதல்.

யானும் பழுமரம் உள்ளிய பறவையின் அவன் இழுமென் சும்மை

இடன் உடை வரைப்பின் நசையுநர்த் தடையா

நன் பெருவாயில்
இசையேன் புக்கு என் இடும்பை தீர எய்த்த
மெய்யேன் எய்யே
ஞகி (68) விரிகதிர் வெள்ளி முளைத்த நள்
இருள் விடியல் (72) வைத்த பாம்பின் தூத்தி
எய்ப்பக் கைக்கசடு இருந்த என் கண்
அகன்தடாரி இருசீர்ப்பாணிக்கு எற்ப (71)
ஒன்றுயான் பெட்டா
வளையின் (73) ஒன்றியகேளிர் போலக் கேள்
கொளல்வேண்டி வேளாண் வாயில்வேட்பக்கூறி
கண்ணிற் காண நண்ணு வழிஇரீஇ பருகு அன்ன
அருகா நோக்கமொடு என்பு உருகுபவைபோற்
குளிர் கொளீஇ (78) ஈரும் பேனும் இருந்து இறை
கூடிவேரோடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் நீக்கி நோக்கு நுழைகல்லா
நுண்மைய பூக்கனிந்து அரவு உரி அன்ன
அறுவை (84) தூவர (81) நல்கி (83) இழையணி
வனப்பின் இன்னகை மகளிர் (85) போக்கில்
பொலம் கலம் நிறைய (86) மருள் செய்யும் மகிழ்
(84) மழையென மாடத்துப் பல்கால் வாக்குபு

தாத்தா (87) வருத்தம் வீட ஆர உண்டு பேர்
அஞர் போக்கிச் செருக்கொடு நின்ற
காலை மற்றவன் திருக்கிளர் கோயில் ஒரு
சிறைத்தங்கி (90)

ஆறு செல் வருத்தம் அகல நீக்கி அனந்தர் நடுக்கம் அல்லது மனம் கவல்பு யாவதும் இன்றி எழுந்த மாலை அன்னதோர் புன்மையும்

காலைக் கண்டோர் மருளும் வண்டு சூழ் நிலையும் மாழாந்து கனை

வென மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்பக் கல்லா இளைஞர் சொல்லிக் காட்டக் கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய் அதன் முறை கழிப்பிய பின்றைப் பதன் அறிந்து துராஅய் துற்றிய துருவை அம்புழுக்கின் பராரை வேவை பருகு எனத் தண்டிக் காழின் கோழுன் சுட்ட கொழுங்குறை

33

வெய்து வாய் ஊழின் ஊழின் ஒற்றி அவை
அவை முனிகுவம் எனினே சுவைய பல்வேறு
விரகு தந்து இரீஇ பண்ணமை சிறியாழ்

ஒண்ணுதல் விறலியர் மண் அமை முழவின்
பாணி தூங்க மகிழ்ப் பதம் பன்னாள் கழிப்பி
ஒருநாள் அவிழ்ப்பதம் கொள்க என்று இரப்ப
முகிழ்த் தலை முரவை போகிய முரியா அரிசி
விரலென நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்
பாலிறைக் கருனை காடியின் மிதப்ப
அயின்றகாலைப் பயின்று இனிது இருந்து பல்லே
கொல்லை யுழுகொ ழு ஏய்ப்ப எல்லையும் இரவும்
ஊன் தின்று மழுங்கிஉயிர்ப்பஇடம்பெறு து
ஊண் முனிந்து, 'செயிர்த்துஎழு
தெவ்வர்திறைதுறைபோகிய செல்வ,பெயர்ந்து எம்
தொல்பதிச் சேறும்' என ஒரு நாள் இனைந்தன
மாக,சிறியவன் போல் செயிர்த்தநோக்கமொடு,
'எம் ஆயம் விட்டு வல்லே அகறிரோ'. என, '
பிடிபுணர் வேழம் அடி துடி அன்ன தூங்கு
நடைக் குழிவியொடு கொள்க' எனப் பெட்டவை
தன் அறி அளவையில் தரத்தர யானும் (127)
தவஞ் செய் மாக்கள் தம் உடம்பு இடா அது
அதன் பயம் எய்திய அளவைமான (92) என் அறி
அளவையின் வேண்டுவ முகந்து கொண்டு (128)

பீடு கெழுதிருவிற் பெரும் பெயர் நோன் தாள் முரசு முழங்கு தானை மூவருங் கூடி அரசவை இருந்த தோற்றம் போல (55) இன்மைதீர வந்தனென்.

கரிகாலன் சிறப்புக் கூறு முகந்தான் (129)

நாட்டு வளனுங் கூறுதல்.

முருகன் சீற்றத்து உருகெழுகுரிசில் (131) வெல் வேல் உருவப்பஃறேர் இளையோன் சிறுவன் (130) தாய்வயிற்று இருந்து தாயம் எய்திப் (132) பிறந்து (137) வெவ்

வெஞ் செல்வன் பௌவம் மீமிசை பகற் கதிர் பரப்பி விசும்பு படர்ந்தாங்குத் (136) தவழ் கற்றதற் றொட்டு (137) மீளி மொய்ம் பின் மிகுவலி செருக்கி (140) எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச் செய்யார் தேஎந்தெருமரல் கலிப்பச் (134) சிறந்த தன்னுடை செவிற் றொன்று நாள் தோறும் வளர்ப்ப (138) ஆளி நன்மான் அணங்கு உடைக் குருளை ஞெரேரெனத் தலைக்கோள் வேட்டம் களிறு அட் டாங்கு இரும்பனம் போந்தைத்தோடும் கருஞ்சினை வேம்பின் அரவாய் அம் குழைத் தெரியலும் ஓங்கு இருஞ் சென்னிமேம்பட

யிலைந்த இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய வெண்ணில் தாக்கிய வெருவரு நோன்தாள் கண் ஆர் கண்ணிக் கரிகால் வளவன் (148)

ஒல்லெனத் திரை பிறழிய

இரும்பௌவத்துக் கரை சூழ்ந்த அகன் கிடக்கை. (179) மண் - மருங்கினன் (227) நாடு (248)— தாழ்தாழைத் தண் தண்டலைக் குடிவயினன் செஞ்சோற்ற பலி மாந்திய கருங்காக்கை மனை நொச்சி நிழல் ஆங்கண் ஈற்று ஆமை தன் பார்ப்பு கவவுமுனையின் ஓம்பவும் (186) இளையோர் வண் டல் அயரவும் (187) பைம்பாகற் பழஞ் செஞ்சுளைய துணரிய

கனி மாந்தி முடக்காஞ்சிச் செம்மருதின் மடக்கண்ண மயில் ஆல (190) யாழ் வண்டின்

கொளைக்கு ஏற்பக் கலவம் விரித்த மட
மஞ்ஞை நிலவு எக்கர்ப் பல பெயரவும் (213)
சுற வழங்கும் இரும் பௌவத்து இறவு
அருந்திய இன நாரை பூம்புன்னைச் சினைச்
சேப்பின் ஓங்குதிரை ஒலி வெரீஇத்
தீம்பெண்ணை மடற் சேப்பவும் (207) அகவர்
(220) அறைக் கரும்பின் அரி நெல்லின்
இனக்களமர் இசைபெருக வறள் அடும்பின்
இவர் பகன்றைத் தளிர்ப் புன்கின் தாழ்காவின்
நனை ஞாழலொடு மரம்குழீஇய அவண் முனையின்
(198) அகன்று மாறி நீல்நிற முல்லைப் பல் திணை
நுவலவும் (221) கானவர் (220) அவிழ்தளவின்
அகன்தோன்றி நடு முல்லை வீ உகு தேறு
பொற்கொன்றை மணிக்காயா நற்புறவின்
நடைமுனையின் (202) மருதம்பாடவும் (220)
கோள் தெங்கின் குலை வாழை கொழுங்கார்தள்
மலர் நாகத்துத் துடிக் குடிஞைக்
குடிப்பாக்கத்துப் பரதவர் (218) அவண்
முனையின் (198) குறிஞ்சிபாடவும் (213) தேன்
நெய்யொடு கிழங்கு மாறியோர் மீன் நெய்யொடு

நறவு மறுகவும் (215) நீங்கரும்பொடு அயல்
வகுத் தோர் மான் குறையொடு மது மறுகவும்
(217) குறவர் செய்தல்

நறும்பூக் கண்ணி குடவும் (219) கானக்கோழி கதிர் குத்தவும்
(222) மனைக்கோழி தினைக் கவரவும் (223) வரைமந்தி கழிமுழ்கவும்
(224) கழிசாரை வரை இறப்பவும் (225) தன்வரைப்பின் கல்
காடு குழீஇ (226) மாமாவின் வயின் வயின் நெற் (180) கூடு
மெழீ இய (182) காடு (248)——பன்மாண் எல்லை தருசன் பல்

கதிர் பரப்பி (233) குல்லை கரியவும் கோடு எரி
நைப்பவும் (234) மாமலை அருவி நிழத்தவும்
(235) மற்றக் கருவி வானம் கடற் கோண்
மறப்பவும் (236) பெருவறன் ஆகிய பண்பு இல்
காலையும் (237) நுரைத்தலைக் குரைப்புனல்
(240) நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
பொறை துறை துறை தோறும் உயிர்த்து ஒழுகி
(239) வரைப்பு அகம் புகு தொறும் (240) புனல்
ஆடு மகளிர்க்கு மெனக்குடைய (241) கூனிக்

குயத்தின் வாய் நெல் அரிந்து (242)சூடு கோடாகப்பிறக்கி(243)நாட்டோறுங்குன்றெனக்குவைஇய குன்றுக்குப்பை (244) கடுந்தெற்று மூடையின் இடங் கெடக் கிடக்கும் (245) சிறைகொள்வேலி ஆயிரம் சாலி விளையுட் டாகக் (247) காவிரி புரக்கும் நாடு (248)—கிழவோன்.

மறுவின்றி அறனொடு புணர்ந்த திறன் அறி செங்கோல் (230) ஒரு குடையான் ஒன்று கூற் (228) பகை முதியோர் அவை புகுபொழுதில் தம்முரண் செலவும் (188) பெருங் கேண்மை பெரிது ஆண்ட (229) வெல்வேற் குரிசில் (231)

அன்னோன்.(231)

புதுவது கூறுதல்.

தாணிழன் மருங்கின் அணுகுபு குறுகி (149) மன்னா நடுங்கத்
தோன்றி (232) வாழியெனத் (231) தொழுது முன்னிற்குவிரா

யின் (150) சுற்று ஆ விருப்பிற் பழுநின்று போற்றுபு நோக்கி (151)
நுங்கையது கேளா அளவை ஒய்யென பாசி வேரின் மாசொடு
குறைந்த துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்
டுடை நல்கி (155) பாடினி அணிய (162) எரி
அகைந்தன்ன ஏடில் தாமரை சுரி இரும்பித்தை
நலின்வலவா நுணங்கு அரில் மாலை
வாலொளி முத்தமொடு பொலியச் சூட்டி (160)
பெறலருங் கலத்
திற் பெட்டாங்கு உண்க என பூக்கமழ்
கைகவிதேறல் வாக்குபுதரத்
தர வைகல் வைகல் பருகி (158) தெற்றெனச்
செலவு கடைக்கூட்டு
திராயின் அதற்குப் பல புலந்து (175) கோட்டிற்செய்த கொடிஞ்சி
நெடுந்தேர் ஊட்டு உளை துயல்வர ஓரி நுடங்கப்பால் புரை புரவி
நால்கு உடன் பூட்டிக் காலின், ஏழடிப்
பின்சென்று இன்தாறு கோல் கிளர்த்து ஏறு
என்று ஏற்றி (167) வீறுபெறு வேர் யாழ்

முறையுளிக் கழிப்பி (168) விடுக்குவன் அல்லன் (177); நில்லா வுல கத்து நிலைமை தூக்கி (176) வரவிடைப் பெற்றவை பிறர் பிறர்க்கு ஆர்த்திச் (174) செல்க என (177) நீர்வாய்த் தண்பணை தழீஇய தளரா இருக்கை நன் பல் ஊரொ நாட்டொடு (170) பறை வெரூஉ நுவலும் பரூஉப் பெருந்தடக்கைக் வெருவரும் செலவின் வெகுளி நன்பல் வேழம் (172) தரவிடைத் தங்க லோவி லன். (173).

3. பொழிப்பு.

கரிகாலன்பாற் பரிசில் பெற்றுவரும் பொருநன் பரிசில் பெறுதற்கேற்ற இடமறியாது இடுக்கணுறும் பொருநனொருவனை வழியிற் கண்டு விளித்தல்.

இடையறாத செல்வ வருவா யினையுடைய

அகன்ற இடத்தை யுடைய பெரிய ஊர்களிடத்து(விழா நாட்களிற் பெறுகின்ற சோறு சுவை மிக்கதாகலின் அதனை விரும்பியுண்டு) விழாக்கழிந்த பின்

ஊரில் அங்குப்பெறுகின்ற சோற்றை (அத்துணைச் சுவையிலதாகலின்) விரும்பாது, இப்பொழுது விழா நடக்கும் வேறிடம் யாதோவெனக் கருதி அங்குச் செல்லும் உபாயத்தை அறிந்த பொருநனே! மடற்றுப் பாடலை (வாய்ப்பாட்டினை)த் தொட்டு எழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தே யுடைத்தாகிய யாழை யுடைய கூத்தர்க்குத் தலைவனே! பிறர்க்குரிய புகழை அரசவைகளிலே சிறப்பித்துக்கூற வல்லவனே! யாழின்கண் உள்ள நரம்புகள் ஏழிற்கும் உரியவனே!

பாடினி கேசாதிபாத வருணனை.

கருமணல் போலும் கூந்தலினையும், பிறை போலும் அழகிய நுதலினையும், கொலைத் தொழிலை யுடைய வில்லைப்போலும் புருவத்தினையும், அழகிய கடையினை யுடைய குளிர்ச்சி பொருந்திய கண்ணினையும்,

இலவினது இதழ்போலும் இனிய சொல்லை யுடைய செம்மை யுடைத்தாகிய வாயினையும், பலவுஞ் சேர்ந்த முத் துக்கள்போற் குற்றந்தீர்ந்த வெள்ளிய பல்லினையும், மயிர் வெட்டு கின்ற கத்தரிகையினுடைய மாட்சிமைப்பட்ட காது போலும்

பொலிவினையுடைய மகரக்குழை யாடுதலால் உண்டாகும் அசை வினைப் பொறுத்தலமைந்த காதினையும், நாணம் வருத்தலாற் பிறரை நோக்காது கவிழ்ந்தநன்மை (அஃதாவது மங்கல சூத்திரம்) விளங்குகின்ற கழுத்தினையும், அசைகின்ற மூங்கில் போலும் பெருத்தலை யுடைய தோளினையும், மெல்லிய மயிரினை யுடைய முன்கையினையும், நெடிய மலையின் உச்சியிலுள்ள காந்தள் போலும் மெல்லிதாகிய விரலினையும், கிளியினது வாயோ

டொப்பினையு டைய ஒளிவிடுகின்ற பெருமை யுடைத்தாகிய நகத்தினையும், பிற ர்க்கு வருத்தமெனத் தோன்றிய நீரிடத்துப் பெயர்தலை யுடைய சுழிபோல உத்தம விலக்கணங்கள் நிறைந்த கொப்பூழினையும், உண்டென்று பிறரால் உணரப்படாத வருந்தும் இடையினையும், ...,பெரிய பெண்யானையினுடைய பெருமை யுடைய கைபோல ஒழுக வந்து மெல்லிதாகத் தம்மில் நெருங்கி ஒன்றித் திரண்ட குறங்கினையும், கணைக்காற்கு இலக்கணமென் றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட ஏனை யிலக்கணங்கள் திருந்தின கணைக்காலுக்குப் பொருந்தப் பெருமை தக்கிருக்கும் அடி இளைத்த நாயினது நாப்போலச் சிறிய அடியினையும், பெடை மயில் அருகு நின்ற மயில் போலும் சாயலினையு முடைய கல்விப் பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

அவள் வழிநடை வருத்தம்

பொறமை.

சாதிலிங்கத்தை உருக்கினாற் போன்ற செய்ய நிலத்தே நடக்கையி னாலே (அவனடிகள்) சுக்கான்கல்லாகிய பகையாலே வருந்தின நோயொடு பொருந்தி மரற்பழுத்தாற் போன்ற துளும்பு நீரை யுடைய கொப்புளத்தால் தனக்கு வந்த வருத்தத்தைத் தாங்கி ஈன் றாகிய உச்சிக்காலமான சந்தியிலே நடத்தலை நடுவே தவிர்தலாலே,

அவன் நிழலிற்றங்குதல்.

காடோறும் யானை யுலாவும் வழியையுடைய காட்டின்கண் இலை யில்லாத மராமரத்திடத்துள்ள வலையை மேலே கட்டினா லொத்த மெல்லிய நிழலிடத்தே தங்கி,

பாலையாழ் வருணனை.

மான்குளம் பழுத்திய இடத்தையொத்த இரண்டருகுந் தாழ்ந்துயர்ந்த பத்தலினையும் (அஃதாவது குடத்தினையும்), விளக்கினது எரிகின்ற நிறத்தையுடைய கட்டிப் போர்த்த தோல் மிக அறியப்படாத இளைய கருப்பத்தையுடைய சிவந்த நிறத்தையுடையாளது அழகியவயிற்றின் மெல்லிய மயிர் ஒழுங்குபடக் கிடந்த தோற்றம்போல இரண்டு தலையுங் கூட்டித்தைத்த மரத்தைப் பொதியும் போர்வையினையும், வளையிலே வாழ்கின்ற நண்டின் கண்ணைக் கண்டாலொத்த பத்த லிரண்டுஞ் சேர்த் தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக் காரணமாகிய மூடுக்குதலமைந்த ஆணியினையும், அட்டமி சந்திரனுடைய வடிவை உடைத்தாய் உண்ணாக்கில்லாத பொருந்துதல்வர்த

டள்ளீடற்ற வாயினையும், பாம்பு தலை
யெடுத்தாலொத்த ஓங்கின கரிய தண்டினையும்,
கரிய நிறத்தை யுடையாளது முன்கை யில்
அழகினையுடைய தொடியை யொக்கும்
ஒன்றோடொன்று நெருங்கின இருப்பை
யுடைத்தாகிய வலிய கட்டினை
யுடைய வார்க்கட்டினையும், அழகினையுடைய
தினை யரிசியிற்
குத்தலரிசியை யொத்த குற்றம் நீங்கிய
விரலாலசைக்கும் நரம்பினை
யுடைய இசை முற்றுப்பெற்ற நீண்ட
கட்டமைந்த தொடர்ச்சியினை
யும், கல்யாணஞ் செய்தமை தோன்றுகிற
மாதரை ஒப்பனை செய் தாலொத்த அழகினையும்,
யாழிற்குரிய தெய்வம் தன்னிடத்தே நின்ற
இலக்கணம் அமைந்த அழகினையும்,
வழிபறித்தலைக்கின்ற
கள்வர் தமது கையில் படைக்கலங்களை எறிந்து

விடும்படி அருளுக்கு மறுதலையாகிற மறத்திணை
அவர்களிடத்து நின்றும் பெயர்க்கும்
மருவுதலினிய பாலையாழை,

வாசித்தன் முறை.

நரம்புகளைக் கடும்படித் தழுவியும்,
உருவியும், தெறித்தும்,
ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும் (வடிசித்து),

39

பாடற் சிறப்பு.

பாடின தாளத்திற்குப் பொருந்தச்
சீரையுடைத்தாகிய தேவ பாணிகளை நீர்மையுடன்
பரக்கப் பாடி,

காடுறை தெய்வத்தின் கடன் கழித்தல்.

காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச் செய்யும் முறைமைகளைச் செய்து விட்ட பின்பு,

எதிர்ப்பட்டதன் அருமையும் பயனும் கூறுதல்.

வழியறியாமையினாலே இவ்வழியைத் தப்பி வேறொரு வழியிற் போகாதே இவ்வழியிலே என்னைக் காண்டலும் நீ முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயனும்; யான் கூறுகின்றவற்றை விரும்பிக் கேட்பாயாக: கொல்லுகின்ற பசியாலே வருந்தின நின்னுடைய கரிய பெரிய சுற்றத்தோடே தொன்றுதொட்டு வந்தபசி நின்னைக் கைவிடுதல் விரும்புவையாயின் நீட்டித்தலின்றி (அஃதாவது உடனே) எழுந்திருப்பாயாக; நீவாழ்வாயாக.

அனுபவம் கூறுதல்.

(இப்போது) செல்வ மெய்திய யானும் முன்பு பழுத்த மரத்தை நினைத்துச் செல்கின்ற பறவை போல அவனுடைய (கரிகாலனுடைய) இழுமென்றெழும் ஓசையினையுடைய அகலமுடைத்தாகிய மதிலில் விரும்பிவந்தார்க்குத் தடையில்லாத நன்றாகிய பெரிய கோபுர வாயிலின்கண்ணே வாயில் காப்போனுக்குக் கூறாமற் புகுந்து, (அஃதாவது அரசன் கட்டளைப்படி வாயிலாளன் பொருநனாகிய வென்னைத் தடுத்து யாரென வினவாது நிற்ப ஒன்றும் கூறாது புகுந்து) என்னுடைய பிடி தீர்தல்காரணமாக முன்பு இளைத்த உடம்பையுடைய யான் அவ்வாயிற்குள்ளே சென்ற உவகையாலே பின்பு இளைப்புத்தீர்ந்து விரிகின்ற கிரணங்களையுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தே படம்விரித்த பாம்பினது பொறியை யொப்பக் கையினது வடுப்பட்டுக் கிடந்த என்னுடைய கண்ணகன்ற உடுக்கையிற் றெறித்துவித்த இரட்டைத்தாளத்தினைப் பொருந்த ஒரு பாட்டினை யான் பேணிப் பாடுவதற்கு முன்னே

முன்பே தன்னோடு பொருந்திய (அஃதாவது பழகிய) நட்டாரைப் போல என்னுடன் உறவு கொள்ளுதலை விரும்பித் தான் உபகரித்த
ற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி (அஃதாவது இவ் விரத்தற் றொழிலையேற்கொண்டதனாலன்று இத்
துணை உபசாரம் யாம் அரசனிடம்
பெற்றோமென மேலும் அத் தொழிலையே
விரும்பும்படி) உபசாரங்களைக் கூறித்
தன் கண்ணிலே காணும்படி (அஃதாவது தனது பார்வையில் யானிருக்க) தனக்கு அண்ணிதான இடத்திலே என்னை இருத்தித் தன்னைக் கண்ணுற் பருகுந் தன்மையை யொத்தகெடாத பார்வையாலே உருகும் மெழுகு முதலியன போல் நெகிழும்படி என்னைக் குளிரச்செய்து,
ஈரும்பேனும் கூடி
யிருந்து அரசாண்டுவேர்வையிலே நனைந்து சறுங்
கள் உள்ளேயோடுதற்குக் காரணமாகியதைத்தற்றொழிலையுடையன
வாகிய சீலையை என்னிடத்தி னின்றும் போக்கி,

கண்ணிற் பார்வை இஃது இழைபோன வழியென்று குறித்துப் பார்க்கவாராத நுண்மையை யுடையவாய்ப் பூத்தொழின் முற்றுப்பெற்ற தன்மையாற் பாம்பினது தோலையொத்த துகிலை
கொல்லி,இழைகளை யணிந்தஅழ கினையுடைய பாட்டாலுங் கூத்தாலும் வார்த்தையாலும் அரசனுக்கு இனிய மகிழ்ச்சியைச் செய்யும் மகளிர் ஒட்ட மற்ற பொன்னாற்செய்த வட்டில் நிறைய உண்டார் மயங்குதலைச் செய்யும் கள்ளை மழை யென்னும்படி மாடத்திடத்தே பல்காலும் வார்த்துத் தரத்தர வழிபோன வருத்தம் போம்படி நிறைய வுண்டு கள்ளுண் ணப் பெறுகிலே மென்று நெஞ்சிற் கிடந்த பெரிய வருத்தத்தை யும் போக்கி மகிழ்ச்சியுடனே யான் அந்திக்காலத்தே இங்ஙனம் மிடி தீர்ந்தபின்பு அவனுடைய செல்வம் விளங்குகின்ற கோயிலில் ஒருபக்கத்தே கிடந்து வழிபோன வருத்தத்தை என்னிடத்தச

சிறிதும் இல்லாமற் போக்கிக் கள்ளின் செருக்கா லுண்டான மெய்ச் சலிக்க மல்லது வேறு மனக்கவற்சி சிறிதும் இன்றித் துயி லுணர்ந்து (அஃதாவது, விழித்தெழுந்து) யான் அவனைக் காண்பதற்கு முன்னாளின் மாலைக்காலத்தில், என்னிடத்தில் நின்று சொல்லிற் கெட்டாத பிடியையும் அவனைக் கண்டு மறுநாட் காலத்தில் என்னைக் கண்டவர் தேற்ற [illegible] [illegible]யென்று மருளுதற்குக் காரணமான துன்பங்கள் இடையறாது

41

மொய்க்கின்ற தன்மையையும் யான் கண்டு மயங்கி இது கனவாயிருக்குமென்று கலங்கிய என்னுடைய நெஞ்சு நனவென்று துணிய வலிய பிடியாலுண்டாகிய வருத்தம் பொதிந்த(எனது)கூட்டத்தார் மனம் மகிழ்ச்சி மிக அவற்குரிய (அஃதாவது அரசற்குரிய) புகழ் கலைத்தாங்கள்முழுவதுங் கற்று என் பின்னின்ற இளையவர்(அஃதாவது என்னோடொத்த இளையவர்) அவற்றைச் சொல்லிக்காட்ட (அரசன்) அதுகேட்டு அவர்களைக் கடுக அழைத்து வாருமென்று வாயிலோர்க்குக் கூறி யாங்கள்

சென்றபின் (அரசன்) தான் அணுகவாரு மென்று அழைக்கையினாலே அக்காட்சியிடத்துச் (அஃதாவது அரசனைக்காணும்போது) செய்யும் முறைமைகளை யாங்கள் செய்து முடித்தபின்பு காலமறிந்து அறுகம் புல்லாற் றிரித்த பழுதை தின்ற செம்மறிக்கிடாயினது அழகினையுடைய புழுக்கினிற் (அஃதாவது இறைச்சியிற்) பரியமேற்குறங்கு நெகிழ வெந்ததனை விழுங்கென்று பலகா லலைத்து (அஃதாவது வருத்தி) இருப்பு நாராசத்தே கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட கொழுவிய பெரிய தசைகளின் வெம்மையை வாயிடத்தே இடத்தினும் வலத்தினுஞ் சேர்த்தி ஆற்றித் தின்று புழுக்கின இறைச்சியையும் சூட்டிறைச்சியையும் யாங்கள் இனி வேண்டே மென்கையினாலே இனிமையுடையவாய் வெவ்வேறாகிய பல வடிவினையுடைய பண்ணிகாரங்கொண்டுவந்து அவற்றைத் தின்னும்படி எங்களை இருத்திப் பண் குறைவற்ற சிறிய யாழையுடைய ஒள்ளிய

நுதலினையுடைய விறல்படப் பாடி ஆடுவோர்
மார்ச்சனையமைந்த முழவினது தாளத்திற்கு
ஆடும்படி மகிழ்ச்சியை யுடைய கள்ளுண்டலிலே
பல நாள் போக்கி ஒருநாள் சோறு மிய
உணவையும் கொள்வாயாக வென்று
வேண்டிக்கொள்கை
யினாலே முல்லை யரும்பின் தன்மையையுடைய
வரியற்ற இடை
முறியாத அரிசி விரலென்னும்படி நெடுகின
ஒன்றோ டொன்று சேராத சோற்றையும் பாலைப்
பொரித்ததனோடே கூடியபொரிக்கறி

களையும்கழுத்திடத்தேவக் குகிரம்பும்படி விழுங்கினகாலத்தே அவ்வினை
விடாதே இனிதாக இருந்து எம்முடைய பற்கள் கொல்லை நிலத்தே
உழுத கொழுவை யொப்பப் பகலும் இரவும் இறைச்சியைத் தின்று
முனைமழுங்கி இளைப்பாறிடம்பெறாதே இவ்வுணவுகளை வெறுத்து
குற்றத்தைச் செய்து எழுந்த பல்க்களைத் திறைகொள்ளும் கூற

பாடுசொல்லாம் முற்றுப் பெற்ற செல்வா! இனி மீண்டு எம்மு டைய பழைய ஊரிடத்தே செல்வேம்' என்று மெதுவாக ஒரு நாளிலே சொன்னேமாக அதுகேட்டுக் கோபித்தான்போல எமக்கு வருத்தத்தைச் செய்த பார்வையுடனே 'எமது கூட்டத் தைக் கைவிட்டு விரைந்து போகின்றீரோ' எனச் சொல்லி, 'பெண் யானைகளொடு புணர்ந்த ஆண் யானைகளைத் தம்மடிகள் உடுக்கையின் கண்ணேயொத்த அசைந்த நடையினையுடையகன்றுகளுடனே கைக் கொள்வாயாக' என்று பின்னும் தான் விரும்பியிருந்த ஊர்தி கள் ஆடைகள் அணிகலங்கள் முதலியவற்றைத் தானறிந்தஅள வாலே மேன்மேலே தர, யானும் மிக்கதவத்தைச் செய்கின்ற மாக் கள் தம்முடைய தவஞ்செய்த வுடம்பைப்போகடாதே யிருந்து அத் தவத்தாற் பெறும் பயனைப் பெற்ற தன்மையொப்ப (அஃதாவது

செல்வத்தைக் குறித்துத் தவஞ்செய்வோர் வீடுபெறாது அப் பிறப்பிலேயே தாம் வேண்டிய செல்வத்தையே பெற்ற தன்மை யொப்ப) என்னுடைய குறைகளை யானறிந்த அளவாலேவேண்டுவனவற்றை வாரிக்கொண்டு, பெரிய செல்வத்தையும் பெரிய பெயர்களையும் வலியை யுடைய முயற்சியையும் வெற்றி முரசு முழங்கும் படையினையு முடைய சேரசோழ பாண்டியர் தம்மிற் பகைமை நீங்கிச் சேர்ந்து செல்வக் குடைபாடின்றி அரசிருத்தற் குரிய அவையாக விருந்த தோற்றம்போல டிடி எக்காலமும் இல்லையாம்படி வர் தேன்;

கரிகாலன் சிறப்புக்கூறி முகத்தான் நாட்டு வளனுங்கூறுதல்.

முருகனது சீற்றம் போலும்

சீற்றத்தினையுடைய (பகைவர் க்கு) அச்சத்தைத் தரும் தலைவன், அழகினையுடைத்தாகிய பல தேரினையுடைய இளஞ்சேட் சென்னியுடைய

வென்றி வேலினையுடைய புதல்வன், (நல்ல முகூர்த்தம் வருமளவும்) தாயுடைய வயிற்றிலே இருந்து பிறக்கையினாலே அரச வுரிமையைப் பெற்றுப் பிறந்து

வெம்மையுடைய எல்லாராலும் விரும்பப்படும் இளஞாயிறு கடலின்மீதே பகற்பொழுதைச் செய்யும் கிரணங்களைப் பரப்பிப் பின்னர் விசும்பிலே மெத்தெனச் சென்றாற்போலத் தவழ்தலைக் கற்றநாள் தொடங்கிக் கூற்றுவனுடைய வலியினும் மிகுகின்ற

வலியாலே கலித்து (அஃதாவது வளர்ந்து) முன்பு தன் வலியறியாத பகைவர் பின்பு தன் வலியறிந்து ஏவின தொழிலைச் செய்யவும் ஏவல் செய்யாத பகைவர் தேசம் மனக்கவற்சி பெருகவும் ஏனையோர் நாட்டிற் சிறந்த நன்னாட்டைத் தோளிலே வைத்துக் கொண்டு நாடொறும் வளர்த்தல் காரணமாக ஆளியாகிய நல்ல மிருகத்தினது வருத்துதலையுடைய குருளை முலையுண்டலைக் கைவிடாத இளைய

பருவத்தே விரைந்து முற்பட இரையைக் கோடற்குக் காரணமான வேட்டையிலே களிற்றைக் கொன்றாற் போலக் கரிய பனங் குருத்தில் அலர்ந்த வலப்பக்கத்து ஓலையும் கரிய கொம்பினையுடைய வேம்பினுடைய வாளரத்தின் வாய்போலும் விளிம்பினையுடைய அழகிய தளிராற் செய்த மாலையும் வாச மிக்க மாலைகளில் மேலாதற்குக் காரணமான பெரிய தலையிலே ஏனையோர் சூடும் அடையாளப் பூக்களிற் சிறந்து காட்ட அவற்றைச் சூடிய சேரனும் பாண்டியனும் ஒரு களத்தே படும்படி வெண்ணில் என்கின்ற ஊரிடத்தே பொருத அச்சந் தோன்றுகின்ற வலியையுடைய முயற்சியையும் கண்ணுக்கு அழகு நிறைந்த ஆத்திமாலையினையுமுடைய கரிகாற் சோழன்,

ஒல் லென்னும் ஓசைபடத் திரைமுறிந்த கரிய கடலினது கரை சூழ்ந்த அகன்ற பரப்பினையுடைய இவ்வுலகத்து ஒரு கூற்றின்கண் உளதாகிய சோழநாடு—தாழ்ந்த

தெங்கினையுடைய குளிர்ந்த மாச் சோலைகளி லிருக்கின்ற குடிமக்களிடத்தில் உதிரத் தாற் சிவந்த சோற்றையுடையதாகிய பலியை விழுங்கின கரிய

காக்கை மனையைச் சூழ்ந்த நொச்சியினது நிழலிடத்துக் கிடந்த ஈற்றுத் தொழிலையுடைய ஆமையினது பார்ப்பினைத் தான் தின் றலை வெறுத்ததாயின் அதனைப் பின்பு தான் பசித்த காலத்துத் தின்பதாகப் பாதுகாத்துவைப்பவும், உழவர்மகளிர் நெய்தனிலத் தின் மணற்குன்றிலே வண்டலிழைத்து விளையாடவும், பசிய பாகற் பழத்தையும் சிவந்த சுளையை யுடையவாகிய குலைகொண்ட

பலாப்பழத்தையுந் தின்று வளைவை யுடைய காஞ்சிமரத்திலும் செவ்விய மருதமரத்திலும் இருந்த மடப்பத்தைத் தம்பிடத்தே யுடையவாகிய பெடைமயில்கள் ஆரவாரித்தழைக்கும்படி அங்கு நின்றும் போந்து யாழோசை போலும்

கேட்டு அதற்குப் பொருந்தத் தோகையை விரித்த அறியாமையை யுடைய மயில் நிலவுபோலும் இடுமணலிலே பல பகுதிப்பட ஆடவும், சுருத் திரியும் கரிய கடலின்கண் இறவைத் தின்ற திரண்ட நாரைகள் பூக்களையுடைய புன்னைமரக் கிளையிலே தங்கினால் அதன்மேலே முரிகின்ற உயர்ந்த அலையினது ஆரவாரத் திற்கு அஞ்சி மருதநிலத்தில் இனிய பனையினது மடலிலே தங்கவும், நாட்டில் வாழ்வார் அறுத்தலைச் செய்யும் கரும்பின் கண்ணும் அரி இன்ற நெல்லின்கண்ணும் எழுப்பின திரண்ட களமருடைய ஓசை மிகுகையினாலே நீரற்ற இடத்திலெழுந்த அடும்பினையும் படர்கின்ற பகன்றையினையும் தளிரையுடைத்தாகிய புன்கினையும் தாழ்ந்த சோலைகளையு முடையதாய் அரும்பின ஞாழலோடே ஏனை மரங் களும் திரண்ட

அந்நாட்டை வெறுத்தார்களாயின் அவ்விடத்தை நீங்கி நெஞ்சாலே கைவிட்டு நீலநிறத்தையுடைய முல்லைக்கொடி படர்ந்த பல காட்டு நிலத்தே சென்று அந்நிலத்தைக் கொண்டாடவும், முல்லைநிலத்து வாழ்வார் அவிழ்கின்ற தளவினையும் பரந்த தோன்றியினையும் அலர்கின்ற முல்லையினையும் பூ உகுகின்ற தேற்றா வினையும் பொன்போலும் பூவினையுடைய கொன்றையினையும் நீலமணிபோலும் பூவினையுடைய காயாவினையுமுடைய நல்ல காட்டில் உறைகின்ற ஒழுக்கத்தை வெறுக்கின் மருதநிலத்தே சென்று அவ்வொழுக்கத்தைப் புகழவும், குலை கொண்ட தெங்கினை யும் குலையினையுடைய வாழையினையும் கொழுவிய காந்தளினையும் மலர்ந்த சுரபுன்னையினையும் துடியோசை போலும் ஓசையினையுடைய பேராந்தையினையுமுடைய குடியிருப்பையுடைத்தாகிய பாக்கத்தில் வாழும் பரதவர் அவ்விடத்தை வெறுப்பின் குறிஞ்சிநிலத்தே சென்று அந்நிலத்தைப் புகழவும்,

தேனூறிய செய்யோடே மிழ ங்கையும் விற்றவர்கள்
மீனினது செய்யோடே நறவையும்கொண்டு
போகவும், இனிய கரும்போடே அவலைக்
கூறுபடுத்தி விற்றவர் கள் மானினது
தசையோடே கள்ளையுங்கொண்டு போகவும், குற
வர் அக்கிலத்துப் பூக்களை வெறுக்கின்
செய்தலினது நறிய பூவாற்
செய்த கண்ணியைச் சூடவும், காட்டிடத்துக்
கோழிகள் செந்நெ

நிலைத் தின்னவும், மனைக்கோழிகள் தினையைத் தின்ன
வும், மலையிடத்திற்குரிய மந்திகள் வழியிலே மூழ்கவும், சுறி

43

வித் திரியும் நாரைகள் மலையிலே கிடக்கவும், குளிர்ந்த வைப்புக்களை
யுடைய நான்கு கூடிய நாடுகள் திரண்டு ஒரு மார்நிலத்தில் ஒரு
மார்நிலத்தில் இடர்தோறும் இடர்தோறும் நெற்கூடுகள் பொருந்
தின சோழநாடு-பல்லுயிர்களும் மாட்சிமைப் படுதற்குக் காரணமா
கிய பகற் பொழுதைத் தரும் கதிரோன் தன்னிலையை விட்டுப் பல
கிரணங்களைப் பரப்புகையினாலே கஞ்சங்குலை தீயவும், மரங்களினு
டையகொம்புகளை நெருப்புத் தின்னவும், பெருமையையுடைய மலை

தன்னிடத்து அருவிகளை இல்லையாக்கவும், இவையொழிந்த தொகுதியையுடைய மேகம் கடலிடத்து முகத்தலை மறப்பவும், பெரிய வற்கட முண்டாகிய நற்குணமில்லாத காலத்தும் நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர் நறைக்கொடியும் நரந்தப்புல்லும் அகிலும் சந்தனமுமாகிய சுமையைத் துறைதோறும் துறைதோறும் இளைப்பாறத் தள்ளிப்போய்க் குளத்திலும் கோட்டத்திலும் புகுந்தோறும் நீர்மேலெழிர் கடுகக் குடைந்து விளையாடக் (களமர்) விளைந்து [illegible] அரிவாளின் வாயாலே நெல்லையறுத்துச் சூட்டை மலையாக [illegible] [illegible] கடாவிட்டு மேரு வென்னும்படி திரட்டின தொலையாத [illegible]ற்பொலி நெருங்கத் தெற்றின குதிரின்கண்ணே [illegible] இல்லையாம்படி கிடத்தற்குக் காரணமான வரம்புகட்டின [illegible] [illegible] ஆயிரக்கலமாகிய செந்நெல்லின் விளைதலை யுடைத்தா[illegible] [illegible]யானது பாதுகாக்கும் நாடு தனக்கே உரித்தாந் தன்[illegible],

குற்றமின்றித் தருமத்[illegible] [illegible] உலகம் [illegible]தற்குக் காரணமாகிய செவ்விய கோல[illegible] [illegible] ஒரு குடையாலும் தனது ஆணையே உலகம் [illegible] பகைமை முதிர்ந்தோர் தனது அரசவையிற் [illegible] [illegible]த் தம் மாறுபாட்டைப் போக்கும்படியாகவும் பெரிய [illegible] நெடுங்காலம் உலகை யாண்ட வெல்கின்ற வேலையுடைய [illegible]

புதுவது கூறுதல்.

யான் கூறிய அத்தன்மைகளை யுடையோனுடைய அருளைத் தன்னிடத்தே யுடைய திருவடிகளை அண்ணியதாக நின்று சேர்ந்து,

“பகையரசர் நடுங்கும்படி விளங்கி வாழ்வாயாக’ எனக்கூறி வணங்கி நம்முடைய வறுமை தோன்ற முன்னே நிற்பீராயின் ஈற்றுத் தொழிலையுடைய பசுத் தனது கன்றுக்குப் பால் சுரந்து கொடுக்க வேண்டும் என்னும் விருப்பம்போல நம்பிடத்து நிற்கின்ற மிடி இன்றாம்படி பேணிப் பார்த்து நம்பிடத்துள்ள வித்தையைத்தான் கேட்பதற்கு முன்னே கடுகக் கொட்டைப் பாசியின் வேர்போலே அழுக்கோடே குறைந்த தையலையுடைய துணிகளைப் போக்கித் தூயவாகிய திரளமுடிந்த முடிகளைக் கரையிலே யுடைய பட்டாகிய உடைகளைத்தந்து பாடினிகூட நெருப்புத் தழைத்தா லொத்த ஒரு வன் செய்ததன்றித் தனக்கென இதழில்லாத

தாமரையையும் நூலினுற் கட்டாத (அஃதாவது பொன்னுற் கட்டப்பட்ட) நுண் மையையும் நெருக்கத்தையு முடைய பொன்னரிமாலையையும் வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தோடே பொலிவு பெறச் சூட் டிப் பெறுதற்கரிய பொற்கலத்தே விரும்பினபடியே உண்பாயாக வென்று சொல்லித் தீம்பூ நாறுகின்ற தண் கடுமையாற் சிறிதமையு மென்று கைகுவித்தற்குக் காரணமான கட்டெளிவை மேன்மேலே வார்த்துத் தரத்தர நாடோறும் நாடோறும் பருகிக் கடுக அவனி டத்தினின்றும் போக நிச்சயிப்பீராயின் அது பொருமற் பலகாலும் வெறுத்து யானைக்கொம்பாற் செய்த தாமரை மொட்டினையுடைய பெரிய தேரிலே சாதிலிங்க மூட்டின தலையாட்டம் பொங்கக் கழுத் தின் மயிரசையப் பாலை யொத்த நிறத்தினையுடைய குதிரைகள் நான்கினைச் சேரப்பூட்டித் தன் காலாலே எழுதிப் பின்னே வந்து

செலுத்துதற் கினிதாகிய செலவுமுடைக்கும் சோலைப் போக்கி 'இவ்விதமாக ஏது' என்று ஏற்றி ஏனை யாழ்களின் பெருமை

பெற்ற யாழ்ப்பாணர்க்குக் கொடுக்கு முறைமைகளைத் தந்துவிட்டு நும்மைக் கடுக விடுவானல்லன் ; செல்வமும் யாக்கையும் முதலியன

நிலையில்லாத உலகத்துப் புகழைச் சேர்த்துப் பார்த்துப் (நீ) வருதலிடத்துப் பெற்ற பொருள்களைப் பிறர்க்குப்பிறர்க்குக்கொடுத்து 'இவ்வாறு போக' எனக்கூறி நீரை எப்பொழுதுந் தன்னிடத்தே யுடைத்தாகிய தண்ணிய மருதநிலஞ் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய நன்றான பல ஊர்களை யுடைய சர்வேசுடனே பகை யல்லார்க்கும் அச்சத்தைத் தோற்றுதற்குக் காரணமான பருத்த பெரிய

47

வலிவினை யுடைய கையினையும் அச்சந் தோன்றும் ஓட்டத்தினையும் கோபத்தினையு முடைய நன்றாகிய பல யானைகள் தருதற் றொழிலிடத்தே நிலைபெறுதலை ஒழிதலிலன்.

—(o)—

IV. நூலின் சிறப்பியல்பு.

1. அக்காலத்து வழக்காற்றுக் கருத்துக்கள்:

64. பழுமர மூள்ளிய பறவை: அதாவது - பழுத்த மரத்தைப் பார்த்துப் பயன் கொள்ள வரும் பறவைகள் என்பது. இது, முன் னம் பரிசில் வழங்கியோரிடம் பின்னும் பரிசில் பெறச் செல் வோர்க்கு உவமமாகக் கூறப்படுவது.இக்கருத்து அக்காலத்துப் புலவரது வழக்காற்றிலிருந்த தென்பது

"பல்கனி நசைஇ யல்குவிசும் புகர்து
பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
பெறு து பெயரும் புள்ளினம் போல"—(209.)

என்னும் புறநானூற்றுச் செய்யு ளடிகளில் மறுதலையிற் கூறப் பட்டுளது காண்க.

“மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று
கூவி
யிரந்தழைப்பார் யாவருமங் கில்லை”

என்னும் ஔவையாரது செய்யுளில் வேறொருபரிசு கூறப்பட் டதையும் நோக்குக.

168-172. “.................... நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா
விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெருஉப்பறை நுவலும் பருஉப்பெருந்
தடக்கை
வெருவருஞ் செலவின் வெகுளி வேழந்
தரவிடைத் தங்கலோ விலனே......”

என்று, நல்வளன் மிக்க நாடுகளையும் யானைகளையும் கொடுப் பன் எனவே, நாடும் யானையும் முதலியவை கொடுத்தல் சிறப்பு டைக் கொடை யென்பது பெறப்பட்டதாம். இக்கருத்துப் பற்றி யன்றே 'யானைக் கன்றும் வளநாடுங் கொணர்ந்தாயோ' என்னும் வழக்காறும் வருவதாயிற்று. [வடநூலார் கஜார்ஸ்வதசுவர்யம் என்ப.]

"ஒளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே"—(205.)

என்னும் புறநானூற் றடிகளையுங் காண்க.

2. அக்காலக் கைத்தொழில் வ..

155. "கோட்டைக்கரைய பாட்டுடை

நல்கி:"

அஃதாவது-'திரள முடித்த முடிகளைக் கரையிலேயுடைய பட்டாடைகள் தந்து' எனவே, அக்காலத்தில், பட்டு சரிகை முதலியவற்றால் அழகுபெறச் சித்திரித்து ஆடைவகைகள் நெய் தொழில்கள் முதலிய செய்தொழில்கள் செழித்திருந்தன வென்பது துணியப்படும். கரையிலே முடியுடைய பட்டுடை என்றது இப்பொழுது நாம் 'சாலு' எனவழங்கும் ஆடைபோலும். (shawls.) இதுபோலவே,

163. "கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தேர்" என்பது முதலிய பிற தொழில்வகைகளையுங் கண்டுகொள்க.

3. அக்கால நாகரிக வொழுக்கம்:

கரிகாற் பெருவளத்தானைப் பாடிய இப்பாட்டினுள், 178-ம் அடி முதலியவற்றான்

அவனது நாட்டின்கண் நானிலத்து வளனும், திணைமயக்கங் கூறுமாற்றான் அந்நிலங்களில் வாழ்வாரது

ஒருமைப்பாடும் அவர் ஒருவர்க் கொருவர் உபகாரிகளாதலும்; ஆற்றுப்படுக்கும் பொருநன் தான் கரிகால்வளவனிடம் பெற்ற பெருவளனைக் கூறி அவனைப் புகழுமாற்றான் [illegible] சிறப்பும், அவனைப்பிரிந் செல்லின் தான் பெற்ற பெருவளன்; பெற[illegible] [illegible] பொருளைத் தேற்றி புலவர்க்குமாற்றான் இலக்

காத்தன் முறையும், இவை போல்வன பிறவும் இந்நூலினால் இனி தறியப்படும்.

——(o)——

V:—உரையாசிரியர்.

1-பெயர் முதலியன:

பெயர்:—நச்சினார்க்கினியர்.

ஊர்:—மதுரை.

சாதி:—அந்தணர்.

சமயம்:— சைவம்.

இவற்றிற்கு ஆதாரமாக,

"வண்டுயிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாச
னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவக்கூ..
தானே யாகிய தன்மை யாளன்"

என்பது முதலாக நம் பாடபுத்தகத்தி னுள்ள நச்சினார்க் கினியர் வரலாற்றிற் கூறப்பட்ட விவரங்களைக் கண்டுகொள்க. 'பாரத்துவாசன்' எனவே, இவர் பாரத்துவாஜ கோத்திரத்துத் தோன்றியவ ரென்பது உணரப்படும்.

காலம்: இவரது உரையின்கண்ணே உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலானக் எடுத்தாளப்படுதலால் இவர் அவர்காலத்தின் பிற்பட்டவர் என்பதும், சங்கத்தார்காலத்து நூல்களுக்கே இவர் உரை செய்ததன்றி, அவர்க்குப் பிற்காலத்துத் தோன்றிய இராமாயணம் முதலிய நூல்களுக்கு இவர் உரை செய்ததாகவேனும் இப் பின்னூல் களினின்று மேற்கோள் காட்டியதாகவேனும் தெரியாமையால்

50

இராமாயணம் முதலிய நூல்களின் காலத்திற்கு இவர் முற்பட்டவரென்பதும் உணரப்படும்.

இவர் செய்த வேறுரைகள்: இப் பொருநராற்றுப்படையே யன்றி, பத்துப்பாட்டின் மற்றைப் பாட்டுக்களாகிய திருமுருகாற் றுப்படை முலியவற்றின் உரையும்,தொல்காப்பியம், கலித்தொகை, சீவகசிந்தாமணி, குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாது விட்ட

இருபதுபாட்டுக்களாகிய இவற்றின் உரைகளும் இவர் செய்தனவேயாம். அன்றியும், திருக்குறள், திருக்கோவையார் முதலிய வேறு நூல்களுக்கும் இவர் உரை செய்தனரென்று சிலர் கூறுவரேனும் அதற்குத்தக்க சான்று இல்லாமையால் அஃது உண்மையென்று கோடற்கு இடனில்லை.

2. இவரது கல்விச்சிறப்பு:

தொல்காப்பியப் பொருளதிகாரம், சீவகசிந்தாமணிமுதலியவற்றிற்கு இவர் செய்துள்ள உரைகளில் வேதம், வேதாங்கமாகிய தர்க்க வியாகரண மீமாம்ஸாதி சாஸ்திரங்கள், இசைநூல் முதலியவற்றின் விஷயங்கள் புலப்படுதலால் இவர் தமிழிலேயன்றி வடநூல்களிலும் மிக்க பாண்டியத்தியமுடையரென்பது விளங்குகின்றது.

அரிய பெரிய நூல்களை இயற்றுவோரது காலத்திருக்கப் பெறாது அவர்க்குப் பிற்காலத்துத் தோன்றி அந்நூல்களின் அகல நுட்பங்களை யெல்லாம் நன்குணர்ந்து அவற்றைத் தம் பின்னுள்ளார் அறிந்து பெரும்பயன் கொள்ளும்வண்ணம் அவ்வந் நூலாசிரியரது சமயக் கோட்பாட்டையும் மனக்கோட்பாட்டையும் தெரிந்து யாவரும் ஒப்பிக் கொண்டுமகிழ உரைவகுப்பதென்றால் அதற்கு எத்தனை சாஸ்திரங்களில் தேர்ச்சிவேண்டும்? அவ்வாறு சகல சாஸ்திர சம்பிரதாயங்களையும் தழுவி உரை செய்வாரது பேரறிவும் பேராற்றலும் மிகுதியும் பாராட்டற்குரிய வென்க.

—(o)—

51

VI:—உரையின் சிறப்பு.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் தாமியற்றும்

உரையின்கண் ஆம்

காங்குக் காட்டும் சொன்னயங்களும், பொருணயங்களும், இடத்திற்கு ஏற்குமாறு கூறும் பல பொருள்களும், சொற்களுக்கு இடனறிந்து கொள்ளும் பொருளும், மற்றுமுள்ள விசேஷங்களும் மிகப் பாராட்டற் குரியனவாம். அவற்றுள் ஈண்டைச் சில எடுத்துக் காட்டுவாம்:—

6. எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிறு: 'செய்யோள்' என்றார், மயிரொழுங்கு விளங்கித் தோன்றுதற்கு, என்பது உரை. ஈண்டு, கரியமயிரொழுங்கு சிவந்த வயிற்றில் நன்கு புலப்படுமாதலின், 'செய்யோள்' என்னும் சொல்லின் ஸாரம் இன்னதென்றார்.

100. கல்லா விளைஞர் சொல்லிக்காட்ட:

(i) இளைஞர்: பொருநன்பின் நின்ற சிறுவர். அவர் அவனோடு வந்தவர். அவர் சொல்லிக் காட்ட என்றது வறிஞர் மனம் வறுமை நீங்குமென மகிழ்தற்குக் காரணமாக அரசனது

புகழைச் சொல்லிக் காட்ட என்றதாம்.

(ii) இனி, அரசனது ஊழியசனுர் பொருநன் கூடவே யிருந்து அவனை உபசரிக்குமாறு அரசனால் நியமிக்கப்பட்டவ ராதலின், இப்போது உருமாறி நிற்கும் பொருநனை இன்னனென அரசனுக்குச்சொல்லிக் காட்ட என்றதாம். (இவ்விரண்டாம் பொருளினால் பொருநனை அரசன் போற்றுமாறு விளங்கியது.)

108. விரகு-பணியாரம். உபாயங்களாற் பண்ணப்படுதலின் விரகென்றார்: ஆகுபெயர். 'விரகு' என்னும் சொல்லின் இயற்கைப் பொருள் உபாயம் என்பது.

111. மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி: மகிழ்-மகிழ்ச்சியைச் செய்யும் கள். பதம்-உண்டல்.

115. காடி - வைத்து. [இஃது நூல் அரிய

பிரயோகம்.]

121. எக் தொல்பதிப் பெயர்த்தெனை: 'தொல்பதி என்

னூர் ; இதுவும் தமக்குப் பதி என்பது தோன்ற, என்பது உரை.

[ஈண்டு, கல்வியுடையார்க்கு எந்தத் தேசமும் சொந்தத் தேசமாம் என்பது குறித்ததாம். தொல்பதி - பழைய ஊர். அரசனுள்ள நகரம் பொருநனக்குப் புதிய ஊராதலின் அவன் தன்னூரைப் பழைய ஊர் என்றான் என்பது குறிக்கத் தொல்பதி என்றாரென் பது உரையின் விசேடம்.]

132. தாய் வயிற்றிருந்து தாயமெய்தி: 'தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயு டைய வயிற்றிலே யிருந்து பிறக்கையினலே அரசுரிமையைப்

பெற்று என்றார்' என்பது நச்சினார்க்கினியம். [கருவிலே திருவு
டையான் என்றபடி,] இவ்வாறே, பெரியபுராணத்துக் கோச் செங் கட்சோழநாயனார் சரித்திரத்திலும் அவர் பிறத்தற்குரிய நாழிகை கழித்துப் பிறந்ததாகக்கூறப்பட்டுளது. அடியில் வரும் பாடல்களைக் காண்க:—
:

"கழையார் தோளி கமலவதி தன்பாற் கருப்ப நாணி
[ரம்பி
விழையார் மகவு பெறவடுத்த வேலை யதனிற் காலமுணர்
பழையா ரொருநா ழிகைகழித்துப் பிறக்கு மேலிப் பசுங்
[குழவி
யுழையார் புவன மொருமூன்று மளிக்கு மென்ன
[வொள்ளிழையார்."

"பிறவா தொருநா ழிகைகழித்தென்
பிள்ளை பிறக்கும்
[பரிசென்கா
லுறவார்த் தெடுத்துத் தூக்குமென
வுற்ற செயன்மற்
[றதுமுற்றி
யறவா ணர்கள்சொல் லியகால மனையப் பிணிவிட் டரு
[மணியை
யிறவா தொழிவான் பெற்றெடுத்தேன் கோச்செங்
[கண்ணனேவென்றான்."

143-146. இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்

53

ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும்:

இங்கு, பனங் குருத்தின் வலப்பக்கத்து
ஓலையும் வேம்

பின் இலையாற் செய்த மாலையும் நறிய மாலைகளில் மேலாதற்குக் காரணமான தலையிலே ஏனையோர் சூடும் அடையாளப் பூக்களினும் சிறப்ப அவற்றை யணிந்தசேரனும் பாண்டியனும் என்றனர். எனவே, இவர்கள் தலையி லணிந்தமையால் அம்மாலைகள் மற்றைய நறுமலர் மாலைகளினும் மேலாயினவென்பதும், மற்றவரினும் இவர் இன்னாரென்று காண்பார் அறிதற்பொருட்டு ஆடம்பரமாக அணிந்தனரென்பதும்விளங்கின.

152. கையது-கலை; [கைவந்த வித்தை.]

161. வலவா - கட்டாத: "வலவார் கண்ணியிளையவர் இளைப்ப" என்னும் புறநானூற்றுச் செய்யுளிலுங் காண்க. (புறம்-253.)

164. ஓரி-கழுத்தின் மயிர்.

உளை-தலையாட்டம்.

166. எழுடிப் பின்சென்று: இங்கு, 'எழிசைக்கும் வழிபாடு செய்தானாகக் கருதலின்' என்றார். பொருநன் எழிசையிலும் திறங் காட்டிப் பாடினனாதலின் அதனை வியந்து நன்கு மதித்து இசை ஒவ்வொன்றற்கும் ஒவ்வோரடியாகப்

பொருநனைத் தொடர்ந்து பின் சென்று வழிபாடு செய்தான் என்றதனால், கல்வியினிடத்தும் கற்றாரிடத்தும் அரசன் கொண்ட பெருமதிப்பை விளக்கினர்.

167. கோலின் தாறு களைந்து ஏறென்று ஏற்றி: 'செலவு

முடுக்குங் கோலைப் போக்கி' என்றதனால் கடுவிசைக்கு இவர் இருத்தலாற்றாரென்று கருதி இயற்கையிற் சேறல் அமையுமென்றார்' என்பது நச்சினார்க்கினியம். மிக்க விரைவாக ஓடும் தேர் முதலியவற்றில் ஏறிச்செல்லும் பயிற்சி யில்லாதவனாதலின், பொருநன் குதிரைகளின் வேகத்தை ஆற்றானென்று நினைந்து குதிரைகளை முடுக்கியோட்ட விடாமல் இயற்கையான நடையில் அவை செல்ல வேண்டுமென்று தாற்றுக்கோலை அரசன் தேர்ப் பாகனிடத்தினின்று நீக்கினன் என்றது இதனாற் பெறப்பட்டது. ஆகவே, இஃது அரசன் பொருநன்பாற் கொண்ட அன்புடைமையை விளக்கியதாம்.

54

190. மடக்கண்ணை

மயிலால—இளமையைத் தம்மிடத்தே யுடைய பெடைமயில்கள் ஆரவாரித்து அழைக்க. இங்குள்ள ' ஆல ' என்னும் எச்சத்தை, "கலவம் விரித்த மடமஞ்ஞை நீல வெக்கர்ப் பலபெயர " (212-213) என்னுமிடத்துள்ள ' பெயர ' என்னும் வினையோடு கூட்டிப் பொருள் கொள்கின்றனர் நச்சினார்க் கினியர். இங்ஙனம் முடிப்பதனுற்போந்த பொருளாவது :—மருத நிலத்துக் காஞ்சி மரத்திலும் மருதமரத்திலும் ஆணும் பெண்ணு மாயிருந்த மயில்களில் ஆண்மயில் நெய்தனிலத்தில் வண்டு பாடும் பாட்டைக் கேட்டு அந்நிலத்தின் மணலில் ஆட என்பது. இப்பொ ருளில் தோன்றும் சுவையாவது-பாகற் பழத்தையும் பலாச்சுளை யையும் தின்று செழித்துள்ள இளமையான பெடைமயில் காமக் குறிப்பு நிகழுமாறு ஆரவாரித் தழைக்கவும், அதனைப் பொருள் செய்யாது ஆண்மயில் அடுத்த நெய்தலில் வண்டினது பாட்டை விரும்பி ஆண்டுச் சென்றது என்பதாம். இதனுனன்றே, 'பெடை

தங்குகின்ற மருதநிலத்தை விட்டுப் பாட்டைக் கேட்டு நெய்த னிலத்தே போர்தமைபற்றி மடிக்கேஞ்ஞை யென்றார்' என்று புலவர் பெருமானை நச்சினார்க்கினியர் விசேடம் எழுதியதாஉம். [நண் டுக்காட்டிய இக்குறிப்பைப் பத்துப்பாட்டு மூழுப் புத்தகத்திற்

கண்டறிக. இது நம்பாட புத்தகத்தில் விடப்பட்டுள்ளது.]

சோழநாட்டின் நில வளம் நீர் வளங்களைக் கூறி அவற்றினுள்ளும் பல வளங்களும் கூறப்புக்க இவ்விடத்தில், மேற்காட்டிய உரை யின் சிறப்பைக் கண்டு சுவையுணர்ந்து இன்பம்எய்தலாவதா யிருப் பவும், மயிலாலவும் மஞ்ஞை பெயரவும், என, 'ஆலுதல்' 'பெயர் தல்' ஆகிய இரண்டையும் எண்ணி முடித்ததன் பயன் சிறப்பாகத் தோன்றவில்லை.

இனி, கண்டகாட்சி யடியாகக் கருத்தினுட் டோன்றும் உணர் ச்சி பொங்கி வெளிப்போந்து பேராறு பெருக்கெடுத்துப் பலவழியும்

ஓதல்போல இயற்கையிலே பெருகிச் செல்லும் கவித்திறமை படைத்த மெய்ம்மைப் புலமைச் செம்மைப் பெரியார் செய்யு ளியற்றுங்கால் அச்செய்யுட் போக்கில் எவ்வெக்கருத்தை எவ்வெவ் விடத்தெழுதினர், அவ்வக் கருத்தை அவ்வவ் விடத்தே ஏறப்பெற்றிப் பெறுரெனின், அவர் செய்யுளிற் சொற்சுவை பொருட் பொருத்தமும்

௫௫

சுவைப்பெருக்கமுந் தோன்ற இயைத்து முடித்துப் பொருள் கொள்வர் புலமை சான்றோர். இச்செய்கை பண்டை நல்லிசைப் புலவரான நூலாசிரியர்க்கும் உரையாசிரியர்க்கும் ஒப்பமுடிந்த தென்பதை அன்னார் செய்துவைத்த நூல்களையும் உரைகளையுங் கண்டு தெளிக. இவ்வாறு உரை வகுப்பதிற் சுவையில்லையாயின், அப்பெருந்தகைப் பாவலர் செய்தருளிய பனுவலெனும் இரத்தினாகரத்தினுள் இக்காலத்தவர்க்குப் புலனாதற் கரியவாய் மறைந்து நிறைந்துள்ள அரும் பெரும் பொருள்களையெல்லாம் வாரியெடுத்து அவ

ற்றைத் தெளிவுற எளியனவாக்கி வழங்கற்கென உதித்த மகோப காரிகளான ஆசிரியர் யாம் இடர்ப்பாடுறற்காம் உரையினை வகுப் பாரோ? வகுக்காரென்க. அவ்வாறு அவர் உரைசெய்ததும் 'மாட்' டென்னும் இலக்கணம் பற்றியேயாம். அவ்விலக்கணந்தானும் பல்லாண்டு முன்னரிருந்து பனுவலியற்றிய தெய்வப்புலவர் செய்த இலக்கியங்களிற் கண்டவாற்று ணன்றே அன்னர் பின்னுலிருந்த ஆசிரியர் தொல்காப்பியனர் தமது செய்யுளியலின்கண்ணே கூறு வாராயினர். இலக்கிய மின்றி இலக்கணம் எங்ஙனே தோன் றிற்று?

“ இலக்கிய மின்றி யிலக்கண மின்றே
எள்ளின் றாயி னெண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம். ”

“இலக்கண மென்ப திலக்கிய முறையுற

வைத்த தென்று வழங்கப் படுமே"

(இவை பேரகத்திய மென்ப.)

என்பன காண்க.

இனி, மாட்டென்னும் இலக்கணந்தான் யாதோவெனின்

அதுவருமாறு:

" அகன்று பொருள் கிடப்பினு மணுகிய நிலையினு
மியன்று பொருண் முடியத் தந்தன ருணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"

56

இதன்பொருள்:—பொருள் கொள்ளுங்கால் அகன்றுபொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் இரு வகையானுஞ் சென்று பொருள்

முடியுமாற்றாற் கோணர்ந்து ரைப்பச் செய்தலே மாட்டென்னும் உறுப்பென்று சொல்லுவர் செய்யுள்வழக்கின்.

பத்துப்பாட்டின் ஒவ்வொரு பாட்டும் அகன்று பொருள் இடப் பச செய்யப்பட்ட செய்யுளாய் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முடிந்த கருத்துடையதாக இயற்றப்பட்ட பாடலாதலின், ஆசிரியர் நச்சி னார்க்கினியர் மேற்கூறிய இலக்கணங் கொண்டு உரை வகுப்பாரா யினர். பலவடிகள் கொண்டு அகலிய இவ் வகவற் பாக்களுக்கு இவ்வா றுரைசெய்தல் இன்றியமையாத தாயினும், சிலவடிகள் கொண்டியன்ற சிந்தாமணி முதலிய ஏனைய செய்யுட்களுக்கும் அவர் இங்ஙனமே உரையியற்று கின்றனரே,அஃதெற்றுக் கெனின் தெரிப்பாம்; அதனைத் தெரிக. அந்நூல்களிலும் எல்லாச் செய்யு ளுக்கும் இவ்விதம் உரை கூறுகின்றாரோ? இல்லையே. ஆண்டும் இன் றியமையாத இடங்களின் மட்டும்

பொருட்பொருத்தமும் சுவையுந் தோன்ற இச் செய்கையைக் கொண்டன ரென்பதறிக. இங்ஙனமே, பிற உரை யாசிரியர்களும் 'மாட்டு' என்னும் செய்யுளுறுப்பை ஆதா ரமாகப் பற்றி ஆங்காங்கு உரைசெய்கின்றனர். உதாரணமாக ஒன்றிரண்டு காட்டுவோம்:

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு"

என்னும் குறளின் விசேட வுரையில், 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யு ளோக்கிப் பிறழ வைத்தார்' எனவும்,

"நெடுநீர் மறவி மடிதுயி லான்குங்
கெடுநீரார் காமக் கலம்"

என்னுங் குறளின்மேல், 'மடியும் விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யு மியல்பும் மறப்பும் துயிலுமாகிய நான்கும்' என உரை

த்து, அதன் விசேட வுரையில்,

'முன்னிற்கற்பாலதாய மடி செய்யு ளோக்கி இடைநின்றது' எனவும், ஆசிரியர் பரிமேலழகர் கூறின

மையும்,

சிலப்பதிகாரக் கொலைக்களக்காதையில்,

"அளைவிலை யுணவி னாய்ச்சியர் தம்மொடு
மிளைசூழ் கோவல ரிருக்கை யன்றிப்
பூவ லூட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றிற் கடிமனைப் படுத்து"

என்றவிடத்து, 'அளைவிலை உணவின்

ஆய்ச்சியர் தம்மொடு கோவலர் இருக்கையன்றி பிளேசூழ்காவல் புனைமாண் பந்தர் பூவல் ஊட்டிய சிற்றில் கடிமனைப்படுத்து' என்றநுவயித்து, மோர் விலையை உணவாகவுடைய ஆய்ச்சியரோடு இடையர் குடியிருந்த இல்லினன்றிக் கட்டுவேலிசூழ்ந்த காவலையும் அழகுபெற விட்ட குளிர்ந்த காவணத்தையுமுடைய செம்மண் பூசப்பட்ட சிறிய இல் லாகிய புதிய மனையிலே இருத்தி' எனப் படியார்க்கு நல்லமிர்தம் பாலித்த அடியார்க்குநல்லா ர் மாட்டிலக்கணங் கொண்டு உரை வகுததமையும,

7 "எழு 6 வினி 3 நெஞ்சஞ் செல்கம் 2
யாரோ

பருகு வன்ன வேட்கை யில்வழி
யருகிற் கண்டு மறியார் போல
வகனக ஊரா முகனழி பரிசி
லுனி லாளர் வேளா ரல்லர்
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே

பெரிதே யுலகம் பேணுநர் பலரே
5 மீளி முன்பி னாளி போல
4 வுள்ள முள்ளவிர் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
1 வாயா வன்கனிக் குலமரு வோரே"

என்னும் புறநானூற்றுச் செய்யுளில், 'வாயா வன்கனிக் குலமரு வோர் யாரோ? நெஞ்சமே, உள்ளம் உள்ளவிர் தடங்காத ஆளி

58

போல இனி எழு' என அந்நாலுரையாசிரியர் முடித்துரைத் தமையும், இவ்வாறே பேராசிரியர் முதலிய பிறரும் தத்தம் உரைகளில் ஆங்காங்கு 'மாட்'டென்னும் இவ்விலக்கணத்தைத் தழுவியே உரை கூறிப் போந்தமையும்கண்டு தெளிக.

இவ்வுரையின் அழகினைப் பொருணயங்கண்டு சுவையுணர்ச்சி மிக்காரே அறிகிற்பா ரன்றி, ஏனையோர் அதனை அறியமாட்டார். அன்னார் அண்மைப்பொருள் அழகற்றதாயினும் அதனையே

ஆசையோடு கொள்வர். செய்மைத்தாய பொருள் சிறந்திருப்பினும் அதனைச் சிந்தையிற் கொள்ளார். பன் னூல்களிலும் பல்காற் பாங்குறப் பயின்று அவற்றின் பயன் தேர்ந்து சுவைத்து இன்புறும் அறிவாற்றல் படைத்த பண்டிதர் சிறப் பில்லாத அண்மைப் பொருண்மு டிபைக் கொள்ளாது சிறப்பு மிக்க சேய்மைப் பொருண்முடிபையே கொள்வர். புழுத்த கத்தரிக் காய் பணத்திற்குப் பத்து வீசை வீட்டடியிற் கிடைப்ப தாயினும், அதனைக் கொள்ளாது, சுவையின்ப மறிந்த மேன்மக்கள் செழித்த கத்தரிக்காய் பணத்திற்குப் பத்துப் பலமாகத் தூரத்தில் விற்பினும் ஆண்டுச் சென்று அதனைக் கொள்பவன்றே. இவ்வாறு உணர்ந்து அமையாமே, பலகலைப் புலமையும் நிரம்பிப் பாருயிர்மாட்

டிப் பேரன்புடையராய்ப் பன்னூல்கட்கும் சீரிய வுரை செய்தளித்துச் செந்தமிழ் நாட்டை வாழ்வித்த பரமோபகாரியாகிய நச்சினார்க்கினியரது உரையின் நயங் காணமாட்டாது, பூனை யானையோடு போரிடப் புக்கதேபோல, அப்பெரியார்திறத்தும் அவருரையின்றிறத்தும் வாய்மதங் கொண்டு தீமொழி சில கூறுவாரும் ஒரு சிலர் உளராயினார். அன்னார் 'மாட்' டென்னும் இலக்கணத்தைக் கேட்டிலராமெனக் கொண்டு அவர் பழித் துரையாடலை ஒழித் தகலுக. இது கிடக்க.

[சங்கச்செய்யுட்களிலும் ஏனைய நூல்களிலும் பன்னெடுநாள் பயின்று அவற்றின் அருமை பெருமைகளை யாய்ந்து அவையிற்றைத் தமிழ்நாடு கொண்டுவாழ அச்சிட்டு வெளிப்படுத்தி வருவோரும், மற்றைய உரையாசிரியர்களைப் போற்றி யொழுகுவதி

எவனுலவாயிடைவந் தமுதவா புடையனென வியம்பப்
பெற்றோன்.

[illegible] பதுங்கியபல [illegible]
[illegible]

எவன்பரம வுபகாரி யெவனச்சி
ஞர்க்கினிய னெனும்பே
ராளன்,
அவன்பாத விருபோது மெப்போது
மலர்கவென நகத்து
மன்றோ"
னனத் தாமே புகழ்ந்து துதித்தும்,
"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட்
டுங்கலியு
மாரக் குறுந்தொகையு
மைஞ்ஞான்குஞ்-சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே"
எனவும்,
"தொல்காப் பியத்திற் றெருகுத்த
பொருளனைத்து
மெல்லார்ந்து மொப்ப
வினிதுரைத்தான்-சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன்

மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு"

எனவும்,

"சான்றோ ருரைத்த தண்டமிழ்த்
தெரிய
வொருபது பாட்டு முணர்பவர்க்
கெல்லா
முரையற முழுதும் புரைபட
வுரைத்தும்"

எனவும்,

"நல்லறி வுடைய தொல்பே ராசான்.
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது
பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா
தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப

வுரைத்துச்

தண்டமிழ் தெரிந்த வண்புகழ்

மறையோன்" எனவும்,

பிறர் பாடல்களை யெடுத்துரைத்துக்

கொண்டாடியும் நச்சி
னார்க்கினியரது கல்வியை மிக்குயர்த்திக்கொண்டாடுகிற பேரா
மான மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ, உ. வே. சாமிநாதையர

60

வர்கள் இந்நாளளவும் நச்சினார்க்கினிய ருரையை ஒரு சிறிதும் மாற்றாது உள்ள துள்ளவாறே பதிப்பித்து வந்து இப்போது இப் பொருநராற்றுப்படையை அவ்வுரையோடு வெளியிட வந்தவர்கள் சிலசில விடங்களில் சிற்சில முடிபுகளை மாற்றி வெளியிட்டது புலமையுடையார்க்குத் துயரை விளையாநின்றது. அவர்கள் அவ்வாறு செய்தமை ஆசிரியர்

நச்சினார்க்கினியரது உரையின் முடிபிற் சிறப்பில்லை யெனக் கொண்டன்று; அவருரைச்

சிறப்பினை ஸ்ரீஐயரவர்கள் நன்கறிவாராயினும் பரீக்ஷைக்குப் பயிலும் மாணாக்கரது வேண்டுகோளினா லென்பதுணர்க. இவ் வுண்மையை, 'மாணாக்கர்களுடைய விருப்பத்தின்படி, இவ்வுரையாகிய நச்சினார்க்கினியம், அவ்வவ் விடத்துச் சிறிது சிறிது முடிபு முதலியன வேறுபடுத்தப் பெற்றதென்றுணர்க' என்று அவர்களேபாட புத்தகத்தின் முதற்பக்கத்தின் கீழ் உடுக்குறி யிட்டுக் கூறியதனான் அறிக. அவர்கள் இச்சமாதானம் கூறினார்களேனும், இப்புதிய செய்கை, பழமையைப் பழிக்குமியல்புடைய ஒரு சிலரது மயக்கத்தை வளர்த்தலில் துணையாகலா மாதலின் ஸ்ரீ ஐயரவர்கள் போல்வார் இது செய்தல் வேண்டப்படுவதன்றாம்.

231. இவ்வடியிலுள்ள 'வாழி' யென்பது 'அவன் மன்னர் நடுங்கத் தோன்றி வாழி' எனக்கூட்டி முடிக்கப் பட்டுள்ளது நும் பாடபுத்தகத்தில். இதனை, 'மன்னர் நடுங்கத்

தோன்றி வாழியெனத் தொழுது முன்னிற்கு விராயின்' எனக்கூட்டி, அதன்பின்,

'காட்டொடு (170) வேழம் (172) தாவிடைத் தங்கலோவிலன்' (173) என்று முடிக்கின்றார் நச்சினார்க்கினியர். ஈண்டுக் காட்டிய முடிபுவேறுபாட்டின் ஏற்றத் தாழ்வுகளை உய்த்துணர்க. பிறவும் இவ்வாறு சிலவுள. அவையிற்றை வரையப் புகின் விரிவு பெரிது [illegible]தாய் நூல் பெருகுமாதலின் விடுத்தாம்.

242. 'உளிக் குயத்தின் வாய் செல்லரித்து' ஈண்டு, 'செல்லிகல் சாய்த்துத் தலையிலே விழுதலின், விலக்கு நிற்க வேண்டு மென்றார்' என்பது நச்சினார்க்கினியரது விசேடவுரை. இங்கு 'உளி' என்ற சொற் பிரயோகத்தின் பயன் கூறு மாற்றுச் சொ

நாட்டினது நன்செய்ப் பயிரின் பெருவளன் உணர்த்தப் பட்டமையின் இது பாராட்டற் குரியதாம்.

யாம் விரிவஞ்சி எடுத்துக் காட்டா தொழிந்த இடங்களிலுள்ள விசேடங்களையும் இவ்வாறே

உய்த்துணர்க.

VII:—இலக்கண குறிப்பு.

[ஈண்டுச்சில அரிய இலக்கணங்கள்
மட்டும்
குறிப்பாக எழுதப்படுகின்றன.]

“ கதுமெனக் கரைந்து வம்மெனக்
கூஉய் ”

இங்கு, ‘வம்மின்’ எனற்பாலது ‘வம்’ என விகாரப் பட்டது; “ தன்னின முடித்தல் ” என்பதனான் ‘வம்மின்’ ‘தம்மின்’ என்பன மின் கெட, ‘வம்’ ‘தம்’ என நிற்றலும்.......
.....கொள்க’ என்பது சேனாவரையருரை.

“ செய்யா வென்னு முன்னிலை
வினைச்சொற்
செய்யென் கிளவி யாகிடனுடைத்தே
”

என்பது சூத்திரம் (தொ-சொ-எச்-54)
[இதன் அகலம் செந்தமிழ், தொகுதி 5.
பகுதி—1.ல் காண்க.] இவ்வாறே,

“ யாவரும் வருக வேனோரும் தம்மென

”—(747)

என்னும் மதுரைக்காஞ்சி யடியிலும் வந்தது காண்க.

110. விறல்—சுவைபுணர்வு உள்ளத்து நிகழ்ந்தவழித் தோன்றும்உடம்பின் வேறுபாடு. இதனைச் சத்துவம் என்பாருமுளர். [இலக்கணவிளக்கம், அணியியல் காண்க.)

இனி, சத்துவம் பத்து வகைப்படும். அவை: மெய்ம்மயிர் சிலிர்த்தல் கண்ணீர்வார்தல், நடுக்க லெடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என்பன.

62

சத்துவமாவது : குறிப்புவரையறை ; அஃதாவது சுத்தச்சுவை யாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய்

வருவது. என்னை ? வேம்பென்று காட்டப்புக்கால் அவ் வேம்பின் இரதங் காட்டாதே அதுதான் இறைவனுக்கு மெய்யின்கண் உறுவது. கருணையென்றால், பாவித்துக் காட்டுமதன்றி மெய்யாகக் கண்ணீர் வந்து அழுவது. [குறிப்பு சுவையதன்கட் டோன்றுவது சத்துவம்] அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி. இதன் விரியெல்லாம் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையிற் காணக் கிடக்கும்.]

165. நால்கு:நான்கு

என்னும் எண்ணுப் பெயரின் திரிபு. இது பெயர்த் திரிசொல். "நால்கு பண்ணினர் நால்வரு மேறினார்" (கனகமாலையாரிலம்பகம்-218.) என்னும் சிந்தாமணிச் செய்யுளடியில் இப்பிரயோகத்தைக் காண்க. அச்செய்யுளின் உரையில் "பால்புரை புரவி நால்குடன் பூட்டி" என்னும் இவ்வடியை மேற் கோள் காட்டினர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். நாலுகு (நாலுகு) என்னும்

தெலுங்கு இதனினின்ற வந்தது போலும்.

166. காலினெழுடிப் பின்சென்ற: இங்கு, 'சென்று' என்பதற்கு 'வந்து' என்று பொருளுரைத்து "செலவினும் வரவினுந் தவினுங் கொடையினும், நிலை பெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னு, மம்மூ விடத்து முரிய வென்ப" (தொ. சொ. கிள. 28.) என்னும் விதியைக் காட்டி, 'சென்று என்பது வந்து என்னும் பொருட்டாய் நின்றது' என்றார். ஈண்டு, ஆற்றுப்படுக்கும் பொருநன் சேய்நிலத்தினின்றும் போந்து தன் முன்னிலையில் நின்ற பொருநனுக்குக் கூறுகின்றானாதலின் 'அரசன் தன் காலாலே எழுடி என் பின்னே வந்தான் என்ன வேண்டுதல் பற்றி' 'சென்று' என்பது 'வந்து' என்னும் பொருட்டாய் நின்றது என்றார். 'ஒருவன் சேய்நிலத்து நின்றும் அணிநிலத்துப் புகுந்தானாயிற் சேய்நில நோக்க அணிநிலம் ஈங்கெனப் படுதலின், அவன்கண் வந்தான், ஆங்கு வந்தான் என்பன இல

க்கணமே யாம்' என்னும் ஆசிரியர் சேனாவரைய ருரைக் குறிப்பை ஈங் குய்த்துணர்க.

63

233.

டைநிலை.

எல்லைதருநன்-சூரியன். தருநன்-தருபவன்; - ந் பெய

——(*)——

VIII:—திணைமயக்கம்.

ஐந்தாவது - ஒரு நிலத்திற்குரிய காலமும் உரிப்பொருளும் கருப்பொருளும் வேறு நிலத்திற்குரியவற்றோடு மயங்குதலாம். [மயங்குதல்-கலத்தல்]. உரிப்பொருளாவன: குறிஞ்சிக்குக் கூடலும், பாலைக்குப் பிரிதலும், முல்லைக்கு இருத்தலும், மருதத்திற்கு ஊடலும், நெய்தற்கு இரங்கலுமாம்; இதனை,

" போக்கெல்லாம் பாலை புணர்த லறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம் - நோக்குங்கால்
இல்லிருக்கு முல்லை யிரங்க லறநெய்தல்
சொல்லிருக்கு மைம்பாற் றொகை"

என்னுஞ் செய்யுளை நோக்கி யுணர்க.

கருப்பொருளென்பன: தெய்வம், உணா, விலங்கு, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்பனவும் இவைபோல்வன பிறவுமாம். [பிறவு மென்றதனால் பூ, நீர், ஊர் இவையிற்றைக் கொள்க.] இவற்றின் விவரம் பின்வருமாறு காண்க:

	குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்
1. தெய்வம்	முருகன்	ஐயமடந்தை	மாயோன்	இந்திரன்
2. உணா.	ஐவனநெல், தினை, மூங்கிலரிசி	ஆறலைத்தன, சூறைகொண்டன	வரகு, சாமை, முதிரை.	செந்நெல், வெண்ணெல்
3. விலங்கு	புலி, யானை, கரடி, பன்றி.	வலியழிந்தயானை, புலி, செந்நாய்.	மான், புல்வாய், முயல்.	எருமை, நீர்நாய்.
4. மரம்	அகில், ஆரம், தேக்கு, திமிசு, வேங்கை.	வற்றின இருப்பை, ஓமை, உழிஞை, ஞெமை.	கொன்றை, குருந்து,	வஞ்சி, காஞ்சி, மருதம்.
5. புள் .	கிளி, மயில்	கழுகு, பருந்து, புறா.	கானக்கோழி, சிவல்.	நாரை, நீர்க்கோழி [
6. பறை.	முருகியம், தொண்டகம்	சூறைகோட்பறை, நிரைகோட்பறை.	ஏறுகோட்பறை.	மணமுழவு, நெல்லரிகிணை.
7. செய்தி.	தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல், தினைமுதலிய விளைத்தல், கிளிகடிதல்.	ஆறலைத்தல் சூறைகோடல்	நிரைமேய்த்தல், வரகுமுதலியகளைகட்டல், கடாவிடுதல்.	நடுதல், களை கட்டல், அரிதல், கடாவிடுதல்.
8. யாழ்.	குறிஞ்சியாழ்.	பாலையாழ்.	முல்லையாழ்.	மருதயாழ்
9. பூ.	காந்தள், வேங்கை, சுனைக்குவளை.	மரா, குரா, பாதிரி.	முல்லை, பிடவு, தளவு, தோன்றி.	தாமரை, கழுநீர்.
10. நீர்.	அருவி, சுனை.	அறுநீர்க்கூவல், சுனை.	கான்யாறு.	யாற்றுநீர், மனைக்கிணறு, பொய்கை.
1. ஊர்.	சிறுகுடி. குறிச்சி.	பறந்தலை.	பாடி, சேரி, பள்ளி.	ஊர்.

நெய்தல்

வருணன்

மீன்விலை
உப்புவிலை

…டமன்பமே
…பெரதவர.

…ன், …
…கண்டல்.

…ம்.

…கோட்டமை.

…நெய்தல்யாழ்.

…
…ப்பறை.

…
…க்குழி.

…ம்புக்கும்